# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 13 வியாழக்கிழமை (26-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:151


'அக்கினிச் சுவாலை' என்ற பெயரில்

# எழுதுமட்டுவாழில் இருந்து பெரும் படை நடவடிக்கை!

## தொடரும் உக்கிரச் சமரில் இரு தரப்பிலும் பேரிழப்புகள்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்26

**எழுதுமட்டுவாழ் பகுதியில் இருந்து ஸ்ரீலங்காப் படையினர் நேற்று அதிகாலை முதல் பெரும் படை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.**

**'அக்கினிச் சுவாலை - I' (AGNI KHEILA - I) எனப் பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உக்கிரச் சண்டை இடம்பெற்றிருக்கிறது. இரு தரப்பிலும் பலத்த உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.**

புலிகளின் நிலைகளை நோக்கி நேற்றுக்காலை 5.30 மணிமுதல் படையினர் பெருத்த எடுப்பில் முன்னேறியதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஹிரிகிர -II இராணுவ நடவடிக்கையின் நான்காவது கட்டத்தின் போது எழுதுமட்டுவாழில் படையினர் கைப்பற்றிய பிரதேசங்களை விரிவுபடுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் படைநடவடிக்கையின் நேற்றைய நடவடிக்கைகள் பிற்பகல் 2.30 மணியுடன் பூர்த்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று முதல்நாள் பகல் சமரில் 2 அதிகாரிகள், 30 படையினர் பலி!

### இழப்புகள் குறித்து இருதரப்பிலிருந்தும் முரணான தகவல்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.26

எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று அதிகாலை ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படையினர் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையின் போது இருதரப்பிலும் ஏற்பட்ட சேதங்கள் குறித்து, இரு தரப்பினராலும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

**இராணுவத் தரப்புத் தகவல்கள்**

நேற்றைய சமரில் தமது தரப்பில் இரு அதிகாரிகள் உட்பட 32 படையினர் உயிரிழந்ததாகவும், 180 படையினர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்திருக்கின்றார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

இந்த நடவடிக்கையின் போது புலிகளின் நிலைகள் மீது பீரங்கி, கவச வாகனத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பளையிலும் ஆனையிறவிலும் இருந்த புலிகளின் நிலைகளை விமானப்படை விமானங்கள் குண்டு வீசித் தாக்கி அழித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் அம்புலன்ஸ் ஓட்டம்

கொழும்பு,ஏப்.26

நேற்று முழுநாளும் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து அம்புலன்ஸ்கள், விடாமல் ஓடித்திரிவதைக் காண முடிந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் இடம்பெற்ற படை நடவடிக்கையில் காயமடைந்த பெரும் எண்ணிக்கையான சிப்பாய்கள் சிகிச்சைக்காகக் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டதாலேயே அம்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

### மிருசுவிலில் ஷெல்லினால் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

மிருசுவில் பகுதியில் நேற்றுக் காலை வீழ்ந்து வெடித்த ஷெல்லால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருசுவில் பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்ற எஸ்.குணராஜா(வயது44) என்ற குடும்பஸ்தரே கையில் படுகாயமடைந்தவராவார்.

வீட்டில் தேங்காய் உரித்துக் கொண்டிருந்த சமயம் தென்னை மரத்தில் வீழ்ந்து வெடித்த ஷெல்லின் சிதறலால் கையில் படுகாயமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-117)

## பாலசிங்கத்துடன் பேட்டி; வழக்குத் தொடர முடியாது

### சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு செய்தி பெற்றதற்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்று சட்டமா அதிபர் தெரிவித்திருக்கிறார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் 19ஆம் திகதி வெளியான உதயனில் அன்ரன் பாலசிங்கம் வழங்கிய விசேட பேட்டி "அரசு போரில் தீவிரம் காட்டுமானால் யுத்தநிறுத்தம் நீடிக்கப்படமாட்டாது - அன்ரன் பாலசிங்கம் சொல்கிறார்" என்ற தலைப்பில் வெளியானது வாசகர்கள் அறிந்ததே.

(11ஆம் பக்கம் பார்க்க)

### வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டாலும்

## "அ.தி.மு.க. வென்றால் நானே முதல்வர்"

### ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை,ஏப்.26

தேர்தலில் அ.தி.மு.க. வெற்றியீட்டினால் தாமே முதல்வர் பதவியை ஏற்கப்போவதாக செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். தேர்தலில் போட்டியிட அவர் தாக்கல் செய்த நான்கு வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்ட பின்னரும் கூட ஜெயலலிதா இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

அவர் தொடர்ந்து தேர்தல் பிரசாரத்திலும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

தான் முதல்வராகுவதைத் தடுக்கவும் தன்னை அரசியலில் இருந்து முற்றாக ஒதுக்கவும் தேர்தல் அதிகாரிகளுக்கு முதல்வர் கருணாநிதி அழுத்தம் கொடுத்து தனது வேட்பு மனுக்களை ரத்துச் செய்திருப்பதாக ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை துறைமுகப் பணி ஸ்தம்பிதம்

## பொருள் ஏற்றும் 10 லொறிகளை படையினர் எடுத்துச் சென்றனர்

### ஆட்சேபித்து உரிமையாளர் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு கப்பல்களில் எடுத்துவரப்படும் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடும் லொறி உரிமையாளர்கள் நேற்றுமுதல் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். இதனால் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்திப் பகுதியில் தரித்து நின்ற லொறிகளில் பத்து லொறிகளை படையினர் நேற்றுமுன்தினம் எடுத்துச் சென்றதை அடுத்தே அதற்கு ஆட்சேபம் தெரிவித்தும் லொறிகளைத் திருப்பி ஒப்படைக்கு

(11ஆம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியமர்ந்தோரில் பலர் நேற்று மீண்டும் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.26

எழுதுமட்டுவாழ் பகுதியில் படையினர் ஆரம்பித்த பெரும் இராணுவ நடவடிக்கையை அடுத்து கைதடி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்களில் பலர் நேற்று தமது இருப்பிடங்களை விட்டு மீண்டும் வெளியேறினர்.

பீரங்கி மற்றும் பல்குழல் ஷெல்களின் தாக்குதல்கள் மற்றும் விமானக் குண்டு வீச்சுக்கள் ஆகியவை காரணமாகப் பீதியடைந்த மக்கள் மூடை முடிச்சுக்களுடன் நேற்றுக் காலை முதல் வெளியேறிச் சென்றதைக் காணமுடிந்தது.

தென்மராட்சியின் கிழக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களில் பலர் நேற்று அங்கிருந்து வெளியேறி கொடிகாமம் ஊடாக வடமராட்சிக்குச் சென்றனர்.

இதேவேளை -

வடமராட்சியில் இருந்து முள்ளி ஊடாக தென்மராட்சிப் பகுதிக்குச் செல்லப் பொதுமக்கள் நேற்று அனுமதிக்கப்படவில்லை.(ஐ-4-5-6-31-117-15)

## கொழும்பில் நேற்றுக் காலை சிறு குண்டுவெடிப்புச் சம்பவம்

கொழும்பு,ஏப்.26

தலைநகர் கொழும்பில் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்ட பகுதியில் - மத்திய வங்கிக்கு முன்பாக உள்ள பழைய கட்டடம் ஒன்றில் - நேற்றுக் காலை 9.30 மணிக்கு குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

சந்தேகத்துக்கிடமான ஒரு பொதியைச் சோதனை செய்தபோது குண்டு வெடித்ததாகப் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட கட்டடத்துக்குள் வெடிக்க வைக்கும் கருவிகள் இரண்டு காணப்பட்டதாகவும் அவற்றில் ஒன்றே வெடித்ததாகவும் மற்றையது செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக குண்டுவெடிப்பு இடம்பெற்ற கட்டடத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த காவலர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பு கோட்டைப் பகுதியைச் சுற்றி வளைத்த பொலீஸார் தீவிர தேடுதல்களை நடத்தினர். (ம-7)

## செய்தியாளர் வன்னி செல்ல உதவிய நால்வர் கைது!

வவுனியா,ஏப்.26

பறையனாளங்குளம் பகுதியில் வைத்து படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த லண்டன் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையாளர் கத்தரின் கொல்வினை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கடத்திச் சென்றதாகக் கூறி சி.ஐ.டியினர் வவுனியாவைச் சேர்ந்த 4 பொதுமக்களைக் கைது செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்காக மேற்படி நான்கு பேரும் செய்தியாளர் கத்தரினிடம் ஒரு லட்சம் ரூபாவைப் பெற்றிருந்தனர் எனத் தெரியவந்துள்ளதாக சி.ஐ.டியினரை ஆதாரம் காட்டி பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய' நேற்றிரவு தெரிவித்தது. (ஐ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் அதிபர்

## திரு.சி.சந்திரகுமார் அவர்கள்



**இலங்கை அதிபர் சேவை
தரம் 2-1க்குப் பதவி உயர்வு
பெற்றமையையிட்டுப்
பெருமகிழ்ச்சி அடைவதோடு
அவர் பணி சிறக்கவும்
மேலும் பல வளங்களும்
பெற்றுப் பல்லாண்டு காலம்
வாழவும் வாழ்த்துகின்றோம்.**

*ஆசிரியர்கள், மாணவர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழையமாணவர் சங்கம்,*
**யா/கட்டுவன்புலம் ம.வி.,தெல்லிப்பழை.** (87102)



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29 - 11 - 1921

மறைவு 19 - 04 - 1999

## திருமதி குழந்தைவேலு சர்வலோகலட்சுமி

திதி: 26.04.2001

*ஆண்டுகள் அடுத்தடுத்தோடிடினும்
மாண்டிடாதும் நினைவலைகள் - உம்மைக்
காண்பதினி எப்போது? - எம்
கண்கள் காயும் அப்போது!
மீண்டும் நீங்கள் எம்முன்னே
தோன்றும் வரம்வேண்டும் - பல
ஆண்டுகள் சென்றிடினும்
நீண்ட தவம் நாமிருப்போம்!
நீண்ட உங்கள் வாழ்வின் வழி - தடைகள்
தாண்டி நாம் தொடர்ந்திடுவோம்!*

*159/3, நல்லை லக்ஷ்மி அவனியு,
கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.* (87046)

பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**


## தையல் கண்காட்சி

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு நடத்தும் தையல் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளையும் நாளை மறுதினமும் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் வ.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன பிரதம இணைப்பாளர் ஆர். இராஜசிங்கம், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன சமூக ஆற்றுப்படுத்துநர் திருமதி இ. பொன்மலர், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் ந. கந்தையா, யாழ்ப்பாண வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.சண்முகரட்ணம், கோப்பாய் தெற்கு கிராமசேவையாளர் எஸ்.தயாபரன், இருபாலை மேற்கு கிராம சேவையாளர் எஸ்.முத்துக்குமாரசாமி ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-4)


**லஷ்சுமி** இணுவில்

29ஆம் திகதி வரை
**பிரசாந்த், சிம்ரன், கரண்**
நடிப்பில்

**கண்ணெதிரே தோன்றினாள்**

(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)
அடுத்த வெளியீடு
**வாஞ்சிநாதன்** (87107)



**நாகம்ஸ்**
சுன்னாகம் (87050)

**விஜய், சிம்ரன்**
நடித்த

**ப்ரியமானவளே**

(இறுதி வாரம்)
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்)



**ராஜா** யாழ்ப்பாணம்

**கார்த்திக், லைலா**
மற்றும் பலர் நடிப்பில் (C/16539)

**ரோஜாவனம்**

காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)
நாளை முதல்
அஜித், லைலா நடித்த
**தீனா**



உ
அளவெட்டி மேற்கு முருகபுரம்

# அருள்மிகு சிவஞான வைரவர் தேவஸ்தான

## மணவாளக் கோலத் திருவிழாவும் பரிசளிப்பு விழாவும்

காலம் :- இன்று (26-04-2001) மாலை 6 மணி
இடம் :- ஆலய மண்டபம்

*தலைமை :- சி.பாலச்சந்தர்*
*(தலைவர் சிவஞான வைரவர் ஆலயம்)*
*பிரதம விருந்தினர் :- திரு.த.குணபாலசிங்கம் (சமாதான நீதிவான், உத்தரவு பெற்ற மொழி பெயர்ப்பாளர்)*

*நிகழ்ச்சி நிரல்*

1. *மங்கள விளக்கேற்றல்*
2. *இறைவணக்கம் :- செல்வி ந.சத்தியநிதி (உபதலைவர்)*
3. *வரவேற்புரை :- திரு.ந.சத்தியரூபன் (உபசெயலாளர்)*
4. *தலைமை உரை*
5. *ஆசியுரை :- அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் (இந்து சமயப் பேரவைத் தலைவர்)*
6. *சமாதான நீதிவானாகப் பொறுப்பேற்ற பிரதம விருந்தினர் அவர்களை வாழ்த்திக் கௌரவித்தல்.*
   *கௌரவிப்பவர் :- திரு.ச.நித்தியானந்தன் (உப அதிபர், அருணாசலம் வித்தியாலயம்)*
7. *பரிசளிப்பு வைபவம்*
8. *பதிலுரை :- பிரதம விருந்தினர்*
9. *நன்றி உரை :- திரு.இ.நாகவரன் (செயலாளர்)*

அனைவரும் வருக!

*அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.* (87039)

- ஆலய பரிபாலன சபை.



# தேர்த் திருப்பணி அறிவித்தல்

வதிரி - பூவற்கரைப்பிள்ளையார் ஆலயத்தில் புதிய சித்திரத் தேர் ஒன்றை உருவாக்கும் பொருட்டு, கடந்த 14.04.2001 ஆம் திகதி சுபநேரத்தில், "தேர் நிர்மாண சிற்பி" உடுப்பிட்டியூர் நாகராசா மகேந்திரன் அவர்களினால், கால்கோள் விழா ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இப்புதிய சித்திரத்தேர் உருவாக்கத்துக்கு பெருமளவிலான நிதியுதவி தேவைப்படுவதனால் அன்பர்கள், அடியார்கள், நலன்விரும்பிகள் முதலியோர் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கு 1012இலும் அல்லது ஆலய பொருளாளர் திரு.சி.க.லோகநாதனிடம் செலுத்திக்கொள்ளலாம் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றோம்.

*பூவற்கரைப்பிள்ளையார்
ஆலயம் - வதிரி.* (87047)

**சோ.மகேஸ்வரன்**
- கௌரவ செயலாளர்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு. குமாரவேலு சரவணபவானந்தன் J.P.

**(B.A. Dip.in Edu., Dip. in Agri., Sp. Trd., S.L.P.S -1)**

யா/மண்கும்பான் அ.த.க.பாடசாலையின் முன்னாள்
அதிபரும் தற்போது யா/வேலணை மேற்கு
நடராஜ வித்தியாலய அதிபரும் சமாதான நீதிவானுமாகிய
திரு. கு.சரவணபவானந்தன்
அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம் 1இற்கு பதவி
உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி
வாழ்த்துக்கூறுவதுடன் அவரது கல்விப் பணி மேன்மேலும்
சிறப்புடன் தொடர மண்கும்பான் வெள்ளைப் புற்றடி
விநாயகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்

**பழைய மாணவர்கள்,
யாழ்.மண்கும்பான் அ.த.க. பாடசாலை.** (87101)



# தாயகம்

## தாயினும் சாலப் பரிந்து....



- ★ பெற்றோர் இல்லாத பிள்ளைகள்,
- ★ தகுந்த பராமரிப்பு இல்லாத பிள்ளைகள்,
- ★ பிறந்த குழந்தைகள் முதல் பத்து வயதுக்குட்பட்ட பிள்ளைகள் ஆகியோரை எமது பராமரிப்பில் பொறுப்புத் தர விரும்புபவர்கள் 02.05.2001 ஆம் திகதிக்கு முன்பாகத் தொடர்பு கொள்ளவும்.

**சிறி அமலா ஜுவல்லர்ஸ்**
**74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(C/16441)



# வில்லிசை ரசிகர்களே!

ஆலய உற்சவங்கள், கலை கலாசார விழாக்களைச் சிறப்பிக்கவும், புராண, இதிகாச வரலாறுகளான "வள்ளி திருமணம், கண்ணப்பநாயனார், தும்பியும் நம்பியும், சத்தியவான் சாவித்திரி, கோவலன் கண்ணகி" போன்றவற்றை வில்லிசையில் கேட்டு இன்புற அழைத்து மகிழுங்கள்

## கற்பகன் வில்லிசைக் குழுவினர்

தொடர்புகளுக்கு:

**திரு.பு.ஸ்ரீகாந்தன்**
கற்பகச்சோலை,
வட்டு.வடக்கு,
சித்தன்கேணி.

**திரு.மு.சடாச்சரம்**
இல.171, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(C/16440)

உதயன்

## கலையாதா போர் மூட்டம்..?

போர் மேகங்கள் சூழ்ந்து விட்டன. நவீன போர் ஆயுதங்கள் நேற்று அதிகாலையே முழங்கத் தொடங்கி விட்டன. கடந்த வருடமும் இதே காலத்தில் போர் உக்கிரமடைந்திருந்ததை— தாம் அதனால் அனுபவித்த அவலங்களை— தமக்கு ஏற்பட்ட இழப்புகளை — மக்கள் தத்தமது மனத்திரையில் ஓடவிட்டுப் பார்த்திருப்பர்; பார்த்தனர்.

சென்ற வருடத்து நிலைமை மீண்டும் வருமோ என்று ஒரு சாரார் மனப்பீதி அடைந்திருப்பர். இன்னொரு சாரார் அத்தகைய ஒரு நிலை மீளவும் வரக்கூடாது எனத் தத்தம் இஷ்ட தெய்வங்களை வேண்டியிருப்பர்.

கடந்த நான்கு மாத காலமாக நிலவிய அமைதியும் மன அச்சமற்ற நிலையும் மீண்டும் இனி எப்போதுவரும் என்ற மன ஏக்கமும் ஆதங்கமும் ஒவ்வொருவர் உள்ளத்திலிருந்தும் பிரதிபலித்து அவரவர் முகங்களில் தெரிகின்றன.

இந்த இடைக்காலத்தில் வந்த பத்திரிகைச் செய்திகள் மற்றும் தகவல்களின் பிரகாரம் போர்க்களத்தில் நிற்கும் இரண்டு தரப்புக்களிடமும் நவீன போர் ஆயுதங்கள் கையில் உள்ளன. ஆகையால் இப்போதைய போர் தீவிரமடைந்தால் — உக்கிரமாகிவிட்டால் — முன்னரைவிடப் பேரழிவுகள் அதிகமாக இருக்கும் என்று மக்கள் மன அச்சம் கொள்கிறார்கள்.

அதனால்—

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விருப்பம் தெரிவித்த இரண்டு தரப்புகள், அது ஆரம்பமாவதற்கு முன்னர் பயங்கர அழிவுக்கு வழிகோலத்தான் வேண்டுமா என்று மக்கள் மனங்களில் கேள்விகள் எழுவது இயல்பே; அதனைத் தவிர்க்க முடியாது.

இரண்டு தரப்புகளும் ஆயுதங்களால் மோதி இடையில் உள்ள மக்கள் அழிவதற்கு மனங்கொள்ளாமல், தமது தற்போதைய முடிவுகளை மக்கள் நலன்கருதி மறுபரிசீலனை செய்யக் கூடாதா என்றும் மக்கள் தங்களுக்குள் கேட்டுக் கொள்கிறார்கள்.

மக்களின் இத்தகைய மனச் சஞ்சலங்களுக்கு இடையில்—

சமாதான முயற்சிகள் தடையின்றித் தொடர்ந்து இடம்பெறும். இது குறித்து இரண்டு தரப்புகளும் உறுதி அளித்துள்ளன. மிக விரைவில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நிகழும் என்பதே எமது எதிர்பார்ப்பு. சமாதான முயற்சிகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கு நாம் முயற்சி எடுத்து வருகிறோம்— என்று நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கிறார்.

சமாதானத் தூதுவரின் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் மக்களுக்குச் சிறு தெம்பை ஊட்டினாலும் நோர்வேயின் முயற்சி நேற்று ஆரம்பமாகியுள்ள போர், தீவிரமடைவதற்கு முன்னர் கைகூடாதா என்ற வேண்டுதலுடன் உள்ளது.

போரில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்த நாட்டினர்கள் மக்கள் அழிவைத் தடுக்க அவர்கள் முன்வந்தால் மெத்தவும் நல்லது.

புலிகள் தமது போர் நிறுத்தத்தைக் கைவிடக் காரணம் அரச தரப்பினரே என்று எரிக் சொல்ஹெய்மும் ஊர்ஜிதப்படுத்தி உள்ளார். அதனால் அரசு இது விடயத்தில் முழுக் கவனம் செலுத்தி அழிவைத் தடுக்க வேண்டும் என்பதே மக்களது விருப்பம். போர் மூட்டத்தைக் கலைப்பதில் அதற்கே பெரும்பங்குண்டு.

# ஈ.பி.டி.பி.நாடாளுமன்றஉறுப்பினரின் உரைக்கு மேயர் ரவிராஜ் கண்டனம்

## மாநகரசபைக்குக் களங்கம் ஏற்படுத்துவதாகக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 26

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தில் யாழ். மாநகர சபையைக் களங்கப்படுத்தும் விதத்திலும் யாழ். மேயரை அகௌரவப் படுத்தியும் ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றிய உரைக்கு யாழ். மாநகர சபையின் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

—இவ்வாறு நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றிய மேயர் என்.ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் இந்து விடுதியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர். எல். எவ். கட்சிகளின் சபை உறுப்பினர்களும் மாநகர சபை ஆணையாளர் மற்றும் சபையின் திணைக்களத் தலைவர்களும் சமுகமளித்தனர்.

மேயர் என்.ரவிராஜ் தனது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:-

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை வைத்து ஈ. பி. டி. பி. கட்சி அரசியல் இலாபம் தேட முயற்சிக்கிறது. சபையில் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவுகளும் சபை உறுப்பினர்களின் ஏகோபித்த முடிவின்படிதான் எடுக்கப்படுகிறது.

ஆனால் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவதாசன், தவராசா, குணசேகரம் ஆகியோர் நாடாளுமன்றத்தில் யாழ். மாநகர சபையின் செயற்பாடுகளைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் உரையாற்றியுள்ளனர். நிர்வாகம் நடத்தத் தெரியாத, மதகு போடத் தெரியாத யாழ். மாநகரசபை முதல்வர் என்று என்னைப் பற்றி நாடாளுமன்றில் கூறியுள்ளனர்.

யாழ். மாநகரசபைப் பகுதியில் எமது நிர்வாகத்தினால் திருத்தப்பட்ட தெருக்களையும் மதகுகளையும் வந்து பார்வையிடுமாறு இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

இந்த விடயங்கள் பற்றி நாடாளுமன்றில் பிரஸ்தாபிக்கவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

யாழ். மாநகரசபையின் நிர்வாகத்தில் ஊழல்கள், தவறுகள் இருக்கிறது என்று எவராவது சுட்டிக்காட்ட முடியுமா? ஈ. பி. டி. பியின் 9 உறுப்பினர்கள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த காலத்தில் யாழ், மாவட்டத்துக்கு 4 கோடியே 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது: இதில் இரண்டு லட்சம் ரூபா மட்டுமே மாநகரசபை வேலைத் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டது.

மாநகரசபை செய்த வேலைத் திட்டங்களை பத்திரிகைகளில் பட்டியல் போட்டு விளம்பரம் செய்ய வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கவில்லை. ஏனெனில் மாநகர சபை நிதியை எனது தனிப்பட்ட தேவைக்காக செலவு செய்ய நான் விரும்பவில்லை.

யாழ். மாவட்டத்திலுள்ள பல பிரதேச சபைகள் தாம் செய்த வேலைத்திட்டங்கள் தொடர்பாக பக்கம் பக்கமாக பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டன;

யாழ். மாநகர சபை கடந்த வருடத்தில் 2 கோடி ரூபா வேலைத் திட்டங்களைச் செய்து முடித்துள்ளது என்பதனைச் சுட்டிக்காட்டவிரும்புகின்றேன்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபையை இவ்வாறு கொச்சைப்படுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாடாளுமன்றத்துக்கு சென்று விட்டோம் என்றஒரு காரணத்துக்காக எதையும் கூறமுடியும் என்று எண்ணக் கூடாது.

இன்று அரசாங்கத்தின் ஒரு அங்கமாக இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஈ. பி. டி. பியினரும் பல பிரதேச சபைகளை நடத்துகிறார்கள்.

குழம்பிய குட்டையிலே மேலும் பிரச்சினைகளை உருவாக்கி தான்தோன்றித் தனமான கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்குமாறு சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகின்றேன்.

இதேவேளை மாநகர சபைக்கு ஆதரவாக நாடாளுமன்றில் கருத்துக்களை வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ. ஆனந்தசங்கரி, தி. மகேஸ்வரன் ஆகியோருக்கு சபை தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

## காணாமற்போனோர் விசாரணை; 22பேரின் உறவினருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலும் 22 பேரின் விவரங்களைத் தந்துதவுமாறு தகவல் அறிந்தவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம், பருத்தித்துறை பொலிஸ் நிலையங்களுக்கு சமுகமளித்து விசாரணைகளை தொடர்வதற்கு வேண்டிய தகவல்களை வழங்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விசாரணை நடைபெறவுள்ள காணாமற் போனதாகக் கூறப்படும் 22 பேரினதும் பெயர் விவரங்கள் வருமாறு:

### யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம்

★ தங்கராஜா றணேஸ் - பொன்னம்பலம் வீதி. அரியாலை.

★ கந்தையா ஜெயபாலன் - முள்ளி வீதி, அரியாலை.

★ லலிதா சண்முகநாதன் - றாடி வீதி, அரியாலை.

★ செல்வரத்தினம் சதீஸ்குமார் - ஆஸ்பத்திரி அருகில் கோப்பாய் மத்தி.

★ வரதராஜா இளங்கோ- மட்டுவில் தெற்கு.

★ எஸ். சுபநேசன் -மட்டுவில் தெற்கு.

★ நவரட்ணராஜா தவபாலன் - கண்டி வீதி, அரியாலை.

★ பசுபதி டனிஸ் - பருத்தித்துறை வீதி, 3 ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

★ ஜே. குகநேசன் - சேகர் வீதி, யாழ்ப்பாணம்.

★ காந்தன் பஞ்சலிங்கம் - கைதடி மேற்கு.

★ மகேந்திரன் யாபு - கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ ராஜேந்திரன் கொணஸ்றாபன் - செல்லர் வீதி, நல்லூர்.

### பருத்தித்துறை பொலிஸ் நிலையம்

★ சோமா செல்லம்மா — புத்தூர் கிழக்கு.

★ தம்பன் வரதன் — அரசடி, தொண்டமனாறு.

★ நவரத்தினம் யோகேஸ்வரன் — கரவெட்டி.

★ வேலுப்பிள்ளை சந்திரகுமார் — கலைமதி வீதி, புத்தூர்.

★ தனபாலசிங்கம் திருச்செல்வம் — தவசிக்குளம், மிருசுவில்.

### சுன்னாகம் பொலிஸ் நிலையம்

★ நெல்லியன் தவராசா — சிறுப்பிட்டி தெற்கு.

★ வேலுப்பிள்ளை மகேந்திரன் — வாரியப்புலம், சுன்னாகம்.

★ செல்வம் தெய்வேந்திரன் — தொல்புரம்.

★ கந்தசாமி சுபாஸ்கரன் — வட்டுக்கோட்டை தெற்கு.

★ கணேஸ் றமணன் சங்கன் வீதி, சுதுமலை தெற்கு.

(க-6-4)

## அபிவிருத்தி தொண்டருக்கான நேர்முகப் பரீட்சை

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தித் தொண்டர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த 23ஆம் திகதி முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

உடுவில் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளும் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

(க-100)

### உதயவாக்கு

எவன் ஒருவன் புகழை வெறுக்கின்றானோ, அவனுக்கு உண்மையான புகழ் தானாக வந்தடையும்.

### நாளை

சித்திரை 14
வெள்ளிக்கிழமை
திதி: சதுர்த்தசி
மாலை 5-54 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பின்இரவு 2.49 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 5.59—7.29
ராகுகாலம்: 10.29-11.59
(பழைய நேரப்படி)

## 25 விதவைகளுக்கு வீடு கட்டித்தர நடவடிக்கை

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வீடற்று இருக்கும் விதவைகள் 25 பேருக்கு வீடு கட்டிக் கொடுக்க ஜி.ரி.சற் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (க-100)

# சமாதானம் கைக்கெட்டிய தூரத்தில்; விரைவில்பேச்சுவார்த்தைதொடங்கும்

## படையினருக்கு விருது வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி

சமாதானம் கைக்கெட்டிய தூரத்தை நெருங்கி விட்டது. சமாதானப் பேச்சுவார்த்தை இன்னும் ஓரிரு மாதங்களில் இடம்பெறும் என்பதே எனது கருத்தாக அமைந்துள்ளது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் மாலை தெரிவித்தார்.

முப்படை வீரர்களின் திறமைகளைப் பாராட்டி வழங்கப்படும்விக்கிரம விருது வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் மாலை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் விருதுகளை வழங்கிய பின்னர் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

யுத்தத்தை வெற்றிகரமாக முடித்துக் கொள்ள யுத்தத்திற்குத் தேவையான ஆயுதங்கள் முதல் சகலவற்றையும் இந்த அரசாங்கம் அளித்துள்ளது. மறுபுறத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சகலவற்றையும் மேற்கொண்டுள்ளோம்.

யுத்தத்தை வெற்றிகரமாக முடிக்க அல்லது குறுகிய காலத்திற்குள் சமாதானத்தை நிலை நாட்ட இந்தப் பணியில் படையினர் மட்டுமன்றி அரசாங்க அதிகாரிகள் உட்பட்ட அனைவரும் இந்த வேளையில் புத்தி சாதுரியமாகச் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

அவர் இங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நாட்டில் ஐக்கியத்திற்கும் இறைமைக்கும் சமாதானத்திற்குமாகத் தமது உயிரையும் துச்சமெனக்கருதிச் செயற்பட்டுவரும் முப்படை மற்றும் பொலீஸாருக்கான விருது வழங்கும் இந்த வைபவத்தில் கலந்துகொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

முப்படையினர் மற்றும் பொலீஸாரின் தன்னலமற்ற பணியினால் வடக்கு—கிழக்கில் தனிநாடு கோரிப் போராடும் புலிகள் இயக்கத்தினருக்கெதிராக எம்மால் செயற்பட முடிந்தது. இது இந்த நாட்டின் சரித்திர முக்கியத்துவமிக்க நிகழ்வாகும்.

அன்று இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் இன்றில்லை. ஆனால் இங்கொன்றும் அங்கொன்றுமாக இடம்பெறும் இவ்வாறான மனித உரிமை மீறல் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களுக்குத் தகுந்த தண்டனையை வழங்கியுள்ளோம்.

புலிகள் இயக்கத்தைப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர முடியும் என்றும் நான் நம்புகின்றேன். எழுந்தமானத்தில் இதனைச் செய்ய முடியாது—என்றார்.

(க-9)

## யுத்த நிறுத்தத்தை உரிய முறையில் பயன்படுத்தாது

# மிக நல்லதொரு சந்தர்ப்பத்தை அரசு கைநழுவ விட்டது துர்ப்பாக்கியமே

## தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் விசனம்

கொழும்பு, ஏப். 26

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாகக் கடைப்பிடித்து வந்த யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் உரிய முறையில் பயன்படுத்த வில்லை; நல்லதொரு சந்தர்ப்பத்தை அரசு கைநழுவவிட்டு விட்டது துர்ப்பாக்கியமே என்று தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை வாபஸ் பெற்றமை தொடர்பாகப் பலரும் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:—

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப-தலைவர் வி. ஆனந்தசங்கரி வெளியிட்டுள்ள கருத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

''நல்ல ஒரு சந்தர்ப்பத்தை அரசு நழுவவிட்டுள்ளது. பொதுமக்களுக்குத்தான் கஷ்டங்கள்-சிரமங்கள் எங்களுக்கு மிகவும் மனவருத்தம் நல்லதொரு சந்தர்ப்பம் வீணாகி விட்டது. இதற்கு முன்னர் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மத்தியஸ்தம் வகிக்க எவரும் முன் வரவில்லை'' — என்றார்.

நவசமாஜக்கட்சிப் பிரமுகர் விக்ஸ் ஜயதிலக்க கருத்துக் கூறுகையில் தெரிவித்ததாவது:—

''அரசுக்கும் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளது என எதிர்பார்த்த எமது கனவுகள் சுக்கு நூறாகிவிட்டன. ஏதாவது கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறவுள்ள வேளையில் அதைக் கைவிடுவது மிகவும் தவறான செயலாகும். சகல இன மக்களின் எதிர்ப்பை அரசு எதிர்நோக்க நேரிடும்'' — என்றார்.

ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்ததாவது:—

''விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்திருந்த யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தமைக்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும். சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு நல்லெண்ணமாகப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தனர். அரசாங்கம் அதற்குச் சாதகமான போக்கைக் காட்டாது; மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வந்தது. இதனாலேயே பொறுமை காத்த புலிகள் யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளனர்'' — என்றார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் குமரகுருபரன் தெரிவித்ததாவது:—

''விடுதலைப் புலிகள் எடுத்துள்ள நிலைப்பாடு சரியானதாகும். தொடர்ந்தும் நல்லெண்ணத்தை வெளிக்காட்டி வந்த புலிகள் அரசிடம் இருந்து நல்லெண்ண சமிக்ஞையை எதிர்பார்த்தனர். அதனை அரசு புலிகளின் பலவீனமாக எண்ணியதால் புலிகள் யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளனர்'' — என்றார்.

(க-3-6-9)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 26

உடுவில் மல்வம் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலய புனருத்தாரண மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து கடந்த 22 நாள்களாக உடுவில் மல்வ இந்து இளைஞர் மன்றத்தினர் நாடு நலம் பெற, மக்கள் நல்வாழ்வுபெற இறை ஆசி வேண்டி மாலை 6 மணி தொடங்கி பஜனை, கூட்டுவழிபாடு நடத்தி வருகின்றனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிறு மாலை 5 மணியளவில் இந்த இளைஞர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் வைபவம் ஓய்வு பெற்ற அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும். (க)

## ஒரே வீட்டில் திருட்டு

ஒரு வீட்டில் இருந்து மூன்று சைக்கிள்கள் திருடப்பட்டன.

பண்டத்தரிப்பில் நேற்று முன்தினம் இரவு அமிர்தநாயகம் என்பவருடைய வீட்டில் இருந்தே இந்த மூன்று சைக்கிள்களும் திருடப்பட்டுள்ளன.

சைக்கிள்கள் மூன்றும் பூட்டி வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (க-15)

## ஜயந்தி விழா

யாழ்ப்பாணம், ஏப். 26

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 96 ஆவது ஜயந்தி விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் கொண்டாடப்படும்.

அன்றையதினம் பூஜைகள், ஆராதனைகள், பஜனைகள், சொற்பொழிவுகள் நடைபெறும். மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். (க)

## பரிசளிப்பு விழா

அச்சுவேலி, ஏப். 26

அச்சுவேலி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை கல்லூரி அதிபர் திருமதி ச. கனகராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வரதராசா கலந்து கொள்வார்.

(க-11)


## பின்னுறுதித் தீர்வை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

திருக்குமார் பெண் நிஷியாமளா
பழம் வீதி, கோப்பாய் தெற்கு.
வழக்காளி

வழ.இல.மணநீக்கம் / 230

எதிராக

சிதம்பரநாதன் திருக்குமார்
இராச வீதி, கோப்பாய்.
தற்போது முகவரி தெரியாது.
எதிராளி

இவ்வழக்கு 2001 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு இ. த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்த போது வழக்காளியும் வழக்காளியின் சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா அவர்களின் நலனை அவதானிப்பதற்காக சட்டத்தரணி திரு. க. கேசவன் அவர்கள் பிரசன்னமாயிருக்க 08-03-2001 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எதிராளியின் அழைப்புக்கட்டளைக்கு எதிராளி இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு சட்டத்தரணி திரு. க. கேசவன் அவர்கள் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்தியபோது மன்று வழக்காளி மன்றில் இன்று அளித்த சாட்சியத்தையும் பிராதுடன் இணைக்கப்பட்ட 1 என்ற ஆவணத்தையும் நன்கு பரிசீலனை செய்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத்தகுதியுடையவர் எனக் கருதி பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1991 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 20 ஆம் திகதி நடைபெற்ற திருமணத்தை இத்தால் ரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் நடைபெற்ற திருமணத்தால் பிறந்த தனஞ்சயன் என்ற பிள்ளை தொடர்ந்தும் வழக்காளியின் பாதுகாப்பிலும் பொறுப்பிலும் இருக்கலாமென வெளிப்படுத்தி இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

வழக்காளி தனது கன்னிப்பெயரை சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைய பாவிக்கலாமென இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வை 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இப்பின்னுறுதித் தீர்வையானது ஏன் முற்றான தீர்வையாக்கபடக்கூடாதென்பதற்கு ஏதாவது காரணம் காட்டப்படாதவிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததன் பின்னர் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படுமென இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

2001 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆம் திகதி

| வரைந்தது | ஒப்பம் |
|---|---|
| லிங்கா துரைராஜா | இ. த. விக்னராஜா |
| வழக்காளியின் சட்டத்தரணி. | மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம். |

மன்றின் கட்டளைப்படி.

து. சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(87023)



## தேவை

### மோகன்ஸ் ரைப்பிங்-சென்ரர்

ஆங்கில ரைப்பிங் தெரிந்தவர் உடன் தேவை. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சகல வசதிகளும் செய்து தரப்படும்.

தொடர்பு:-
எஸ். கணேசன்,
சமாதான நீதிவான்,
நெல்லியடி.
T.P. - 3212 (87020)



### யாழ்ப்பாணக் கல்லூரி

பட்டப்படிப்புகள் பிரிவு
வட்டுக்கோட்டை

S. L. A. S.

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்சேர்த்தலுக்குரிய போட்டிப் பரீட்சைக்குரிய வகுப்புகள்.

ஆரம்பம்:- 1.5.2001
நேரம்:- காலை 9 மணி

ஆசிரியர்:-
அ. குமாரவேல்
(87025)



துன்னாலை கிழக்கு

## வெலிக்கந்தோட்ட பிள்ளையார் கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விழா

நாளை (27-04-2001) வெள்ளிக்கிழமை

முற்பகல் 9.30 மணிமுதல் 10.30 மணிவரை வரும் சதுர்த்தித் திதியும், சித்தயோகமும் மிருகசீரிட நட்சத்திரமும், மிதுன லக்கினமும் அமைந்த சுபமுகூர்த்தத்தில் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

பிரதிஷ்டா பிரதம குரு:

''முத்தமிழ்க் குருமணி''
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
(கதிரமலை சிவன் தேவஸ்தானம்—சுன்னாகம்)

மண்டலாபிஷேகம் 45 நாள்கள் நடைபெறும். அடியார்கள் வருகை தந்து தரிசித்து உய்தி பெறுமாறு அழைக்கப்படுகின்றனர்.

விநாயகர் திருப்பணியில் நிற்கும்
கோயிலைச் சேர்ந்த பொதுமக்கள்.

(சி/16436)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08 | 27 |
| — | — |
| 05 | 03 |
| — | — |
| 1936 | 2001 |

செல்வி

### தம்பிமுத்து நகுலேஸ்வரி

நாள்கள் பல சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு என்றுமே அகலாது!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்போம்.

இன்று (26—04—2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரன், சகோதரிகள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

| நிரந்தர முகவரி: | தற்காலிக முகவரி: |
|---|---|
| தபாற் கட்டைச்சந்தி, | 418, நாவலர் வீதி, |
| கண்டி வீதி, அரியாலை. | அரியாலை. |

(87022)

# மக்கள் வங்கி

## மகிழ்வுடன் அறிமுகப்படுத்தும்

## உங்கள் தேவைகளை நிறைவு செய்ய எங்கள் சேவைகள்

- ▲ நடைமுறைக் கணக்குகள்
- ▲ ஜனஜய சேமிப்புக் கணக்குகள்
- ▲ சிசு உதான சேமிப்புக் கணக்குகள்
- ▲ இசுறு உதான சேமிப்புக் கணக்குகள்
- ▲ வனிதா வாசன சேமிப்புக் கணக்குகள்
- ▲ யாத்திரிகர்கள் கணக்குகள்
- ▲ முதலீட்டு சேமிப்புக் கணக்குகள்
- ▲ வதிவற்றோர் நாணயக் கணக்குகள்
- ▲ வதிவுள்ளோர் நாணயக் கணக்குகள்
- ▲ சேமிப்புக் கணக்குகள்
- ▲ நிலையான வைப்புகள்
- ▲ வெளிநாட்டு நாணய மாற்றல்கள்

- ▼ வர்த்தகர்களுக்கான கடன் திட்டங்கள்
- ▼ ஆசிரியர்களுக்கான கடன் திட்டங்கள்
- ▼ தனியார் அரச கூட்டுத்தாபன – ஊழியர்களுக்கான கடன்கள்
- ▼ பிரதேச சபை ஊழியர்களுக்கான கடன்கள்
- ▼ வீடமைப்புக் கடன்கள்
- ▼ சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள்
- ▼ வரையறையற்ற அடமானக் கடன்கள்
- ▼ நகை அடைவுக் கடன்கள்
- ▼ தற்காலிக மேலதிகப் பற்றுக்கள்
- ▼ உத்தரவாதக் கடிதங்கள்
- ▼ நாணயக் கடிதங்கள்

நாடளாவிய தொலை நகல் பண மாற்றங்கள்

## மக்கள் மனமறிந்த வங்கி

# மக்கள் வங்கி

(C/16435)

# ஏழாலை பெரியதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் சிறப்பிதழ்

## ஏழாலையம் பதியில் எங்கள் பெரியதம்பிரான்

யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் எங்கள் ஏழாலைக் கிராமத்துக்கு ஒரு சிறப்புண்டு; ஏழு ஆலயங்கள் ஒரே சூழலில் இருந்தமையால் "ஏழாலையம்" என்று வழங்கி வருகின்ற ஒரு வரலாற்றுச் சிறப்புண்டு. இத்தகு சிறப்புமிகு பதியிலேதான் எங்கள் பெரியதம்பிரான் ஆலயமும் அமைந்துள்ளது.

வருடந்தோறும் சித்திரை மாதத்தில் வரும் முதலாவது புதன்கிழமை முதல் பெரியதம்பிரான் பொங்கல் வழிபாடுகள் ஆரம்பமாகும். இவ்வழிபாடுகளை ஏழாலைக் கிராம மக்கள் ஒன்றிணைந்து அமைதியாகவும் சந்தோஷமாகவும் கொண்டாடி வருகின்றனர்.

"நம்பினோர் கெடுவதில்லை" என்பதற்கிணங்க எம்பெருமானை நம்பி வாழ்பவர்கள் நலமுடன் வாழ்கின்றார்கள். மேலும் எல்லோருக்கும் எம் பெருமானின் நல்லருள் கடாட்சம் பெருக வேண்டி நிற்கின்றோம்.

பரிபாலன சபையினர்,
பெரியதம்பிரான் கோயில், ஏழாலை.

## இறையாசி பெற்று இன்பமுடன் வாழ்க!

ஏழாலை பெரியதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று (2001-04-26) வியாழக்கிழமை வெகுவிமரிசையாக நடைபெறுகின்றது.

பெரியதம்பிரானின் தொன்மையையும், அற்புதங்களையும், அருமைபெருமைகளையும் யாவருமறிவர். அத்தகு சிறப்புக்கள் மிகுந்த எம் பெருமானின் பொங்கல் விழா தொடங்கியதும் ஏழாலைக் கிராமமே புனிதத் தன்மை பெற்றுவிடும்.

ஆலயத்தில் நிகழும் கொடியேற்றம் முதல் அக்கினிப் பிரவேசம் வரை பக்திபூர்வமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடியார்களின் குறையனைத்தையும் தீர்த்து நிறைவினை வழங்கி அவர்களை மங்கலத்தோடு மிகவும் மகிழ்ச்சியாக வாழ்விக்கின்றார் பெரிய தம்பிரான்.

மேலும் எல்லோருக்கும் இறை நல்லாசி கிடைப்பதாக.

- ஆலயப் பிரதம பூசகர்.



## ஏழாலைப் பதியமர்ந்த எங்கள் பெரியதம்பிரானே!

எழில் பொங்கும் ஈழத்தின் அருள்மிகு தெய்வமே! பெரியதம்பிரானே!
பொழில் சூழ்ந்த ஏழாலையில் எழில்க் கோவில் கொண்டவரே பெரியதம்பிரானே!
தொழில் கொள்ளும் மானுடர் தொழுகின்ற தெய்வமே பெரியதம்பிரானே!
அருள் தந்து நாளும் காத்தருள வேண்டுமையா பெரியதம்பிரானே!

சாடியிலே தங்கிச் சார்ந்தவரைக் காப்பவரே பெரியதம்பிரானே!
சங்கரனின் திருவுருவாய் இங்கருள எழுந்தவரே பெரியதம்பிரானே!
நாடிவரும் பக்தருக்கு நலமருளிக் காப்பவரே பெரியதம்பிரானே!
நாற்புறமும் மருதநிலம் சூழுகின்ற பதியிலமர்ந்தவரே பெரியதம்பிரானே!

சித்திரைத் திங்கள் சிறந்திடும் புதனில் கொடியேற்றம் உந்தனுக்கு பெரியதம்பிரானே!
சீர்மிகுந்த கனிகளுடன் பொங்கல் மடை உந்தனுக்கு பெரியதம்பிரானே!
நித்திய நேர்த்திகள் அக்கினிப் பிரவேசம் உந்தன் ஆலயத்தில் பெரியதம்பிரானே!
நிலாசோதயன் கன்னிமார் நாச்சிமார் வழிபாடு உந்தன் விழாவினிலே பெரியதம்பிரானே!

அற்புதங்கள் நிறைந்த ஆதித்தெய்வமே பெரியதம்பிரானே!
அவனியிலே மக்கள் துயர் தீர்த்தருள வேண்டுமையா பெரியதம்பிரானே!
நற்றவங்கள் நிறைவேற்றும் உந்தன் அடியவரை பெரியதம்பிரானே!
நாளெல்லாம் காத்தருள வேண்டுமையா பெரியதம்பிரானே!

-மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்-

ஏழாலை பெரியதம்பிரான் ஆலயத்தில் இன்று (2001-04-26) வியாழக்கிழமை நடைபெறுகின்ற பொங்கல் விழா சிறக்க வாழ்த்துவோர் :

**துர்க்கா பல்பொருள் வாணிபம்**
(பலசரக்குப் பொருள்கள்,
பாடசாலை உபகரணங்கள்,
அழகுசாதனப் பொருள்களின் உறைவிடம்)
ஏழாலை தெற்கு - மயிலங்காடு - சுன்னாகம்
உரிமையாளர்: திரு.கே.மணிவண்ணன்

**ரூபன் எலக்ரோனிக்ஸ் - ROOBAN ELECTRONICS-**
இலத்திரனியல் உலகில் புதியதோர் முன்னோடியாக
இதோ! சுன்னாகத்தில்!!
கே.கே.எஸ்.வீதி சுன்னாகம் -
(பழைய பொலீஸ் நிலையம் அருகில்)
உரிமையாளர்:- திரு.ந.ஜெயரூபன்-
ரீவி டெக், ரெலிபோன், பக்ஸ் மெசின்,
போட்டோக் கொப்பி மெசின் திருத்துநர்கள்

**நிலோ தொலைத் தொடர்பு நிலையம்**
(போட்டோப் பிரதிகள், கவரிடுதல், கிளீன்கட்
ஆகியவற்றுக்குச் சிறந்த நிறுவனம்)
ஏழாலை தெற்கு- சுன்னாகம்
தொலைபேசி ~ உள்ளூர் ~ 021 ~ 2165 ~ வெளியூர் 0094~ 21~2165
உரிமையாளர்: திரு.து.செல்வரத்தினம் (கற்கண்டு)

**துரை தொலைத்தொடர்பு சேவை**
இரவு பகல் சேவை
உள்ளூர்:- 070-212762 வெளியூர்:- 0094- 70- 212762
**துரை பேக் கவுஸ்**
(பாண், பனிஸ், கேக், பிஸ்கட் வகைகள்
யாவும் சிறந்தமுறையில் செய்துகொடுக்கப்படும்)
உரிமையாளர்:- திரு.வி.ஸ்ரீகாந்தன்.
(87060) சூராவத்தை, சுன்னாகம்.

**விற்பனையாகின்றது!**
இலங்கை நிர்வாக சேவை (SLAS),
ஏனைய போட்டிப் பரீட்சைகளுக்கு
ஏற்ற வழிகாட்டி நூல்
" பொது அறிவு "
★ கொழும்பு சரசு பதிப்பக வெளியீடு.
★ ஐந்தாவது புதிய பதிப்பு
ஆக்கம்:
வே.தபேந்திரன் B.Com.
எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்.
(87068)
யாழ். விநியோகஸ்தர்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021- 2573

**RENNY OPTICIANS**
RENNY
றெனி மூக்குக் கண்ணாடி அகம்
உங்கள் கண்களைச் சரியாகப்
பரிசோதித்துக் கண்ணாடிகளை
உடன் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:
றெனி மூக்குக் கண்ணாடி அகம்
இல.540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
288, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கனொன் போட்டோ கொப்பி சேவிஸ் கட்டடம்
பிரதான வீதி - பருத்தித்துறை.
(C/16423)

## ஊர்காவற்றுறையில் சுற்றிவளைப்பு

ஊர்காவற்றுறை,ஏப்.26

ஊர்காவற்றுறையில் 'காம்' வீதி மற்றும் பருத்தியடைப்பு உள்ளிட்ட பகுதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணி முதல் கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு வீடு வீடாகச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடற்படையினர் அடையாள அட்டைகளைப் பரிசீல்னை செய்ததுடன் வீடுகளையும் தீவிரமாகச் சோதனையிட்டனர்.

வதியால் சென்றவர்களும் தடுத்து வைக்கப்பட்டு அடையாள அட்டைகள் பரிசீலனை செய்த பின்னர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க-10)

## 'ஹைலன்ட்' பால்மா விலை அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.26

கிரியா மில்க் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் 400 கிராம் 'ஹைலன்ட்' பால்மா பைக்கட்டின் விலை 84 ரூபாவிலிருந்து 96 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லீற்றர் பாலுக்கு மேலதிகமாக ஒரு ரூபா செலுத்துவதாலும் தேசிய பாதுகாபபு வரி செலுத்த வேண்டியிருப்பதாலுமேயே 'ஹைலன்ட்' மாவின் விலையை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டதாக உற்பத்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

(க)

## ஆசிரிய கலாசாலை அனுமதிக்கு நேர்முகத் தேர்வு

காரைநகர்,ஏப்.26

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் 2001 ஆம் ஆண்டு புதிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகத் தேர்வு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற உள்ளவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்குரிய விரிவுரைகள் ஜூன் முதலாம் திகதி ஆரம்பமாக உள்ளது. வன்னி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடத்துவது தாமதிப்பதாலேயே விரிவுரைகள் ஆரம்பிப்பது தாமதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-73)

## வறிய குடும்பங்களுக்கு பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

கந்தர்மடம் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தமது பிரிவிலுள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் 9 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கந்தர்மடம் கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மேற்படி அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டத்தில் வைத்தே இந்த அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. உடுபுடைவைகள், புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் என்பனவே வழங்கப்பட்டன.

சங்கத்தின் தலைவர் க.சிவராமலிங்கம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கலாபூஷணம் விருது பெற்ற நாடகமேதை நவாலியூர் நா.செல்லத்துரை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

(ம-4)

## மல்லாகம் பஸ் நிலையத்தில் பயணிகள் சிரமம்

வலி.வடக்கு,ஏப்.26

மல்லாகம் பஸ் தரிப்பு நிலையத்தில் தேங்கியுள்ள வெள்ளத்தினால் பிரயாணிகள் பெரும் சிரமம் அடைகின்றார்கள்.

பஸ்கள் தரிப்பிடத்துக்கு வரும் போதும் வாகனங்களை விலத்தும் போதும் தேங்கியுள்ள நீர் வீசியடித்து உடைகள் அழுக்கடைகின்றன.

கடந்த சில தினங்களாக பெய்த மழையினால் இந்நிலைமை காணப்படுகின்றது.

(க-86)

# இணைப்பாட்சியில் இனிய வாழ்வு இல்லையெனில் தமிழீழமே தலையாய மருந்தென்ற மாமனிதன்

## தமிழன் தன் தாயகத்தை இழக்கக்கூடாது என்று அன்றே வலியுறுத்தியவர் தந்தை செல்வா

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று தமிழ் உணர்வினை தட்டியெழுப்பிய தமிழ்த தலைவர்கள் பலர் தடுமாறித் தடம் புரண்ட வேளையில் எமக்கு வழிகாட்ட - எமைக்காப்பாற்ற - தோன்றிய தலைவர் தான் சாமுவேல் ஜேம்ஸ வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள். வேறு சொற்களில் விளம்பின் நெருக்கடிக்கு ஈடுகொடுத்த தலைவராக **(A Leader in Crisis)** தந்தை செல்வா விளங்கினார்.

1944இல் தமது 46ஆவது அகவையில் அரசியலில் அடியெடுத்து வைத்த நம் செல்வா அவர்கள், 1977, ஏப்ரல், 26இல் தனது 79ஆம் அகவையில் உயிர் நீக்கும் வரையிலும் 33 ஆண்டுகள் இன்றைய தமிழ் இனமும் எதிர்கால வழித்தோன்றல்களும் என்றும் மறவாது எண்ணிப் பார்க்கத்தக்க முறையில் நிலைத்த பணியாற்றினார். அவர் தன் வாழ்நாளில் தன் குறிக்கோளை தன் இலட்சியத்தை - அடையவில்லை என்பது உண்மையெனினும் தமிழன் வாழ வேண்டின் தமிழன் தன்னை ஆள வேண்டும் என்ற உன்னத கொள்ளையை இறுதிவரை கடைப்பிடித்து, எங்களுக்கு ஒரு "நம்பிக்கை ஒளியாக" அவர் விளங்கியதனால் வரலாறு அவரை மனம் திறந்து வாழ்த்துவது உறுதி.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராகவும் இலங்கையின் தலைமை அமைச்சராகவும் விளங்கிய டி.எஸ். சேனநாயக்கவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதென அன்றைய தமிழ்க்காங்கிரஸ் தலைவர் எடுத்த முடிவும் எம் இனத்தின் பிரிக்க முடியாத அங்கமாய் விளங்கும் இந்தியத் தமிழ் வம்சாவளி மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டதற்கு அன்றைய தமிழ்க்காங்கிரஸ் தலைவர்கள் துணை போனதும் எம் இனத்திற்கு ஏற்பட்ட ஒரு சாபக்கேடாகும்.

இவற்றினால் ஏற்படவிருக்கும் பேரழிவைத் தடுக்க தோன்றியதே தமிழரசுக் கட்சி. இது 1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி மருதானை ஜி.ஸி.ஸ்.யூ.மண்டபத்தில் தொடங்கப்பட்டது. தந்தை செல்வாவின் இம்முடிவிற்கு பக்கபலமாக விளங்கியவர்களில் வாழ்வகத்தை காத்த வன்னியசிங்கம், அஞ்சாநெஞ்சன் டாக்டர் இ.மு.வி.நாகநாதன், தமிழரசுக் கட்சியின் மூளையென வருணிக்கப்பட்ட திரு.வ.நவரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஒரு விடுதலை இயக்கம் வீறு கொண்டெழவேண்டின் அவ்வினத்தில் படிந்துள்ள மாசு அகற்றப்பட வேண்டும். இதனை நன்குணர்ந்த தந்தை செல்வா அவர்கள் தமிழ் இனத தில் ஆழப்பதிந்திருந்த - படர்ந்திருந்த - சாதியெனும் பெரும்நோயை களைவதில் மிக்க அக்கறைகாட்டி பெரு வெற்றி பெற்றதையும் நாடு அறியும்.

### தமிழ் இனத்தை ஒன்றுபடுத்திய ஒப்பற்ற தலைவன்

சாதி வெறியைச் சாடிய சான்றோன் செல்வநாயகம் அவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, திருகோணமலை என்று மாநில அடிப்படையில் தமிழ் மக்கள் மாறுபட்டு வேறுபட்டு, கூறுபட்டு, சிதைந்து போவதைக் கண்டு கலங்கிய தந்தை செல்வா அவர்கள் மொழியால், பண்பாட்டினால் நாகரிகத்தினால் ஒன்றுபட்டுள்ள தமிழ் மக்கள் வேறு எக்காரணத்தினாலும் பிரிவுண்டு அழியாது தடுக்க, நம் தமிழர் அனைவரும் உரிமை பேண, ஒன்றுபட்டு ஓங்கிக் குரல் எழுப்ப வேண்டுமென்பது அவரின் விடுதலை அறியா விருப்பமாகும்.

"இசுலாம் எங்கள் நெறி இன்பத் தமிழ் எங்கள் மொழி" என்று இசுலாம் தழுவிய தமிழ் மக்களையும் எம்முடன் பின்னிப்பிணைத்தவரும் நம் செல்வாவே ஆவார். இதுவரை ஈழத்தில் தோன்றிய எந்தத் தலைவரும் செய்யாத அளவிற்கு தமிழ் இனத்தை ஒன்று படுத்திய பெருமை தந்தை செல்வாவையே சாரும். அவரின் எளிமை மாறாத புன்னகை, ஆளுமை தமிழ் மக்களை ஒன்று படுத்தும் ஆற்றலைப் பெற்றிருந்து.

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் மீது அவர் கொண்டிருந்த பற்றிற்கு எல்லையே இல்லை. அவர்கள் மறந்தும் தோட்டக் கூலிகள் என்று யார் கூறினாலும் அவருக்கு எல்லை மீறிய கோபம் ஏற்படுவதுண்டு. அவர்களின் உழைப்பினாலேயே இந்நாடு வாழுகின்றது. அவர்கள் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த மனிதர்கள் - எம் தமிழர்கள் - என்று அவர் அடிக்கடி இடித்துக் கூறும் சொற்கள் அவரின் இரக்க உணர்வுக்கும் இன உணர்ச்சிக்கும் எடுத்துக்காட்டு. இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமை 1948இல் பறிக்கப்பட்ட போது, பொங்கியெழுந்து அவர்களுக்காக ஓங்கிக் குரல எழுப்பிய அவர் "இன்று இந்திய வம்சாவளித் தமிழ் மக்களுககு கழுத்து அறுக்கப்படுகிறது. நாளை எமக்கும் இதுவே நடக்கும் என்று அவர் முன்கூட்டி உணர்த்தியதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத நிலையில் இந்த நிகழ்ச்சியை வரலாறு நன்கு பதிவுசெய்துள்ளது.

### தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம்

ஓர் இனம் எதையும் இழக்கலாம், மீண்டும் வாழ்வு பெறலாம். ஆனால் ஓர் இனம் தனது தாயகத்தை இழந்தால் அந்த இனம் தலைதூக்க முடியாது. ஓர் இனம் தன்னைத்தான உணர்த்துவதற்கு அந்த இனம் உயிரோடு ஒட்டிய வாழ்வு பெறுவதற்கும் தாயகம் மிக இன்றியமையாதது **(Land is not only necessary for self expression of an ethnic group, but it is also necessary for the very survival of the ethnic group)** என்று ஆங்கில அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ள கருத்தும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

ஈழத்தமிழன் இந்நாட்டில் வாழ்வு பெறவேண்டுமென்றால் அவன் தன் தமிழ் மண்ணை தன் தாயகத்தை எந்நிலையிலும் இழக்கக் கூடாது என்பதைத் தந்தை செல்வாவை மிஞ்சிய நிலையில் எந்தத் தமிழ்த் தலைவனும் வலியுறுத்தியதில்லை. அதே வேளையில் வாழ்வகத்தைக் காத்த வன்னியசிங்கமும், டாக்டர் இ.மு.வி. நாகநாதனும் சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளையும் இவ்வுணர்வில் ஊறி தமிழ் ஈழ மண்ணைக் காக்க, அரசு ஆதரவுடன் நடக்கும் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க பட்டபாட்டினை - ஆற்றிய பணியினை - யாம் மறப்பதற்கில்லை. "தமிழ் மண் காப்போம தாயகம் மீட்போம்" என்ற என் நூலுக்கு தந்தை செல்வா அளித்துள்ள அணிந்துரை அவரின் உள்ளத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது.

"உலகம் அனைத்தையும் பெற்றும் எம் உயிரை இழப்பின் என்ன பயன்" என்று விவிலியம் விடுக்கும்



வினாவை நினைவுறுத்தும் தந்தை செல்வா, தமிழ் மண்ணை இழக்காது காப்பதும் அத்தகையதே என்பதை அவர் வலியுறுத்திய பாங்கினை எளிதில் மறக்க முடியாது. திருமலை, மூதூர், மட்டக்களப்பு போன்ற மண் வளம், நீர் வளம் மிக்க பூமியை அவருடன் காரில் பயணம் செல்லும் போது கண்டு மகிழ்வதுண்டு. இந்த மூன்று போக விளைச்சலுள்ள இந்தத் தமிழ் மண்ணை எப்படி யாம் இழக்க முடியும் என்று கண்கலங்கிய நிலையில் அவர் என்னைப் பார்த்து கூறிய கூற்றுக்களை இன்று நினைக்கின்ற போது கூட எம்மை மீறி கண்கள் கலங்குகின்றன.

இணைப்பாட்சியில் இனிய வாழ்வு இல்லை எனில் தமிழீழமே தலையாய மருந்தென்ற "மாமனிதன்" தந்தை செல்வா அவர்கள். ஒன்றிற்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற நாட்டில் ஒற்றையாட்சி உதவாது. அது சிறுபான்மை இனங்களைக் காலப்போக்கில் சீரழிந்து ஒழித்துவிடும் என்பது தந்தை செல்வாவின் திட்ட வட்டமான கொள்கையாகும். அதற்கு அவர் கண்ட மாற்றுவழி, மாமருந்து தான், இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம் என்பதாகும். எனினும் பாரதப் போரை நினைவு கொண்டு ஐந்து நாடு கேட்டு, ஐந்து ஊர் கேட்டு, ஐந்து வீடு கேட்டு எதுவும் கிடையாத நிலையில் "எடு வில்லை தொடு அம்பை" என்று கண்ணன் அருச்சுனனுக்குக் கூறிய ஆணைக்கு அமைய தந்தை செல்வா இணைப்பாட்சி கேட்ட நிலையிலும் இறங்கி வந்து மாநிலசுயாட்சி கேட்டு, பிரதேச சபை கேட்டு, மாவட்ட சபை கேட்டு பின்பு அதிகாரப் பரவல் கேட்டு எதுவும் கிடையாது என்ற நிலையில் தான் தமிழீழம் என்பது முடிந்த முடிவு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்.

### இறுதி உயில்

அவர் மறைவதற்கு முன் 19, நவம்பர், 1976 இல் இலங்கை நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய இறுதி உரையே அவர் தமிழ் இனத்திற்கு விட்டுச் சென்ற இறுதி உயிலாகும். அவ்வுரையில் எதுவித ஐயத்திற்கு இடமின்றி இணைப்பாட்சியில் இணைந்து போக சிங்கள இனம் மறுத்த நிலையில் தமிழர்களைக் காப்பாற்ற உள்ள ஒரே வழி தமிழ் ஈழம் காண்பதுதான். என்பதை எதுவித ஐயத்திற்கும் இடமின்றி இடித்துரைத்தார்.

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், சிறிமாவோ-செல்வா உடன்பாடு ஆகியவையெல்லாம் மை காய்வதற்கு முன்பே கிழித்தெறியப் பட்டதுடன் உரிமை கேட்ட தமிழர்கள் சிங்கள மண்ணிலும் பின் தமிழ் மண்ணிலும் சாகடிக்கப்பட்டதை செல்வா கண்ணாரக் கண்டு கண்ணீர் வடித்தார். *"இனிக் கடவுள்தான் தமிழ் இனத்தைக் காப்பாற்ற வேண்டும்"* என்று சிங்களத் தலைவர்களால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்ட நிலையில் ஏக்க உணர்வோடு கூறிய கூற்றுக்களை நாம் மறப்பதற்கில்லை.

### செல்வாவும் சந்திரிகாவும்

சில வேளைகளில் உண்மை தம்மை மீறி வெளிவரும் என்பதற்கமைய, இன்றைய சிறீலங்கா அரசின் குடியரசுத் தலைவர் திருமதி சந்திரிகா சென்ற 2000, ஆவணி மூன்றாம் திகதி பொது மக்கள் முன்னணி அரசின் அரசமைப்பு நகல் ஒன்றினை நாடாளுமன்றத்தில் ஒப்படைத்து ஆற்றிய உள்ளம் தொடும் உரை இதோ "அவர்கள் (தமிழர்கள்) தமது நியாயமான உரிமைகளை வேண்டி நிற்கின்றனர். அவர்களுடைய நியாயமான உரிமைகள் 52 ஆண்டுகளாக மறுக்கப்பட்டுள்ளன. 1977 இல் பதவியேற்ற அரசாங்கத்திடம் ஆறில் ஐந்து பெரும்பான்மையிருந்தும் அவர்களின் உரிமைகளை வழங்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமது உரிமைக்காக போராடிய தமிழ் மக்கள் 1983 வரை நான்கு தடவைகள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர். கொன்று குவித்து பொசுக்கப்பட்டனர். 1983 இல் அவர்கள் மீது பெற்றோல் ஊற்றப்பட்டு உயிரோடு பொசுக்கப்பட்டனர். அவர்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டு எரித்து சாம்பலாக்கப்பட்டன. கடந்த 52 ஆண்டுகளாக சிங்களப் பெரும்பான்மை அரசு எதுவென்றாலும் தமது உரிமைகளை வழங்குமென்ற நம்பிக்கையை இழந்தனர்.... இவ்வாறு நம்பிக்கை இழந்ததின் காரணமாகவே அவர்களில் சிலர் தனி நாடு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்."

குடியரசுத் தலைவர் சந்திரிகா அம்மையார் மேலும் உரை நிகழ்த்துகையில் "நான் மீண்டும் மீண்டும் கூறிவைக்க விரும்புவது இதுதான், அதாவது அதிகாரப் பரவலாக்கல் முறைமை பற்றி மகா சங்கத்தின் சில உறுப்பினர் அடங்கலாக ஒரு சிறு எண்ணிக்கையான மக்கள் தவறான சிந்தனையில் உள்ளனர். திலக் கருணாரத்தின போன்றோரும் இந்தச் சிறு பிரிவினைச் சேர்ந்தவர்கள் ஆவர். அமைதியையும் தோழமை வாழ்வையும் விரும்பும் எல்லா மக்களும் இத்தகையவர்களை மக்கள் விரோதிகள் அல்லது சமூகத் துரோகிகள் என ஒதுக்கித் தள்ள வேண்டும். அரசாங்கங்களும் இவர்களை கண்டிப்பதோடு நின்று விடாமல் இவர்களின் தாளத்திற்கு ஆடுவதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று சந்திரிகா அம்மையார் கூறிய கூற்றுக்கள் அவரின் மனநிலையை அப்படியே இயம்புகிறது.

1994 இல் நவம்பர் மாதம் குடியரசுத் தலைவராக சந்திரிகா அவர்கள் பதவியேற்ற போது "1920களில் இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம்" என்ற அவரின் தந்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி. கூறிய கூற்றை நினைவுபடுத்தி அவற்றைத் தாங்கள் நிறைவு செய்யின் இலங்கை வரலாற்றில் அவருக்கு நிலைத்த இடம் உண்டு என்று குறிப்பிட்டு எழுதியிருந்தேன். அதற்கு நன்றி நவின்று எழுதிய கடிதத்தை யான் பேணிக் காத்துள்ளேன்.

**மா.க.ஈழவேந்தன்**

பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதை அடுத்து அதற்கு அவர் வருத்தம் தெரிவித்து முன்னாள் அமைச்சர் ஸ்டான்லி டிசொய்சா **(Stanley De Soysa)**விடம் பண்டாரநாயக்க ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தார். புத்த குருமாரின் நெருக்கடிக்கு யான் ஆளாகி உள்ளேன் என்னை மன்னித்திடுக என்பது அக்கடிதத்தின் சுருக்கம். இக்கடிதம் கொடுக்கப்பட்ட போது தந்தை செல்வாவின் அருகில் யான் இருந்தேன். அப்போது தந்தை செல்வா, "தலைமை அமைச்சரின் நிலையை உணர்ந்து வருந்துகிறேன் என்று அவருக்குக் கூறவும்; இவ்வொப்பந்தம் கிழிக்கப்பட்டதின் விளைவு நாடெல்லாம் எதிரொலிக்கும். தொடர்ச்சியாக நாடெங்கும் இரத்தக்களறி ஏற்பட வழிவகுக்கும். ஆனால் அவரின் முடிவு இதுவாயிருக்கும்போது நாம் என்ன செய்ய முடியும்" என்று தந்தை செல்வா அன்று கூறியதற்கு அமைய இன்று 60,000 மேற்பட்ட உயிர்களை இழந்துள்ளோம். கற்பழிப்புக்கு கணக்கில்லை. கோடிக்கணக் கில் உடைமைகள் இழப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சி பாதாளத்தை நோக்கிச் செல்கிறது.

எனவே பண்டாரநாயக்கவின் நெருங்கிய நண்பன் தந்தை செல்வாவின் இன்னுயிர் அமைதியுற இணைப்பாட்சியில் சிங்களவரும் தமிழரும் இனிய வாழ்வுகாண, நாட்டில் ஒற்றுமையோங்க, பொருளியல் வளம் பொலிவுடன் விளங்க, தாய்மையுணர்வுடன் உள்ள சந்திரிகா அம்மையார் ஏற்ற அரசியல் தீர்வு காணவேண்டும் என்று வேண்டி நிற்கின்றோம். நாம் காணும் கனவு நனவாகுமாகில் "பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா" என்று பாட்டுக்கொரு புலவர் பாரதி கண்ட கனவு நனவாவது உறுதி. அத்தோடு விண்ணுலகில் வீற்றிருக்கும் நம் தந்தை செல்வா தனக்கேயுரிய தனிப் புன்னகையுடன் எம்மை வாழ்த்துவதும் உறுதி. ✳

## வீரனடா! எங்கள் தந்தை!

மொழி பறி போயிற்றென்றால்
உயிர் பறி போன தேயாம்
இழந்தனம் தாயகத்தை யென்றால்
இன்னுடல் அழிந்த தாகும்.
அழிந்தது கலை பண்பாடே யென்றால்
அணியெலாம் அழிந்த தன்றோ?
விழித்தெழு! தமிழ்!! இன்றே!!!
வீண் துயில் கொள்ளலாமோ?
ஒழித்திடு ஒற்றை யாட்சி
ஓங்குக சமஷ்டி என்று
பழித்திட பகைவர் எல்லாம்
பல காலம் சிறையில் வாட்ட
ஒழிந்திடாது 'தமிழர் தாகம்'
ஒப்பரும் தாயகமே என்று
விழிப்புடன் போர் தொடுத்த
வீரனடா! எங்கள் தந்தை!

- மு.திருநாவுக்கரசு
(முன்னாள் மாவட்ட நீதிபதி)

## மாணவர்களின் சீருடை; பாடநூல் ஒதுக்கீட்டு நிதியில் 10 வீத வெட்டு

கொழும்பு,ஏப்.26

43 லட்சம் பாடசாலை மாணவர்களுக்காக சீருடை மற்றும் இலவச பாடநூல்களுக்கென அடுத்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 10 சதவீதத்தை வெட்டுவதென திறைசேரி தீர்மானித்துள்ளது.

பாடநூல்களை இலவசமாக வழங்க 110 கோடி ரூபாவையும் மாணவர்களின் சீருடைகளுக்கென 90 கோடி ரூபாவையும் வழங்குமாறு கல்வி அமைச்சு திறைசேரியிடம் கோரியிருந்த போதிலும் - இலவச பாடநூல்களுக்காக 90 கோடி ரூபாவையும் சீருடைத் துணிகளுக்காக 90 கோடி ரூபாவையும் வழங்குவது என திறைசேரி தெரிவித்திருந்தது. இருப்பினும் தற்போது 10 சதவீத நிதியை வெட்டுவது என திறைசேரி தெரிவித்துள்ளது.

திறைசேரியின் இந்த முடிவு காரணமாக அடுத்த ஆண்டு இலவச பாடநூல்களையும் சீருடைத் துணிகளையும் வழங்குவதில் கல்வி அமைச்சுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள 20-20 **Japan Sony T.V., Eurostar** அன்ரனா, 40அடி பைப், **T.V.** வயர், வானொலிப் பெட்டி **RX-M.**50, பெரிய றலி சைக்கிள், லுமாலா சைக்கிள், றைஸ் குக்கர், கிறைண்டர், பெரிய கட்டில், றிமோட் **Fan,** சில்வர்ப் பாத்திரங்கள், **Yamaha News Mate V**-80 மோட்டார் சைக்கிள், **Vespa P.X-150 Italy** ஸ்கூட்டர் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 442, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (சுதாஸ் கீறீம் ஹவுஸ அருகில்).

(87058)

பிறிமா சிவப்புப் பேடு, புறொயிலர் குஞ்சுகள் 25.4.2001, 26.4.2001 ஆகிய இரு தினங்களிலும் காலையில் விநியோகிக்கப்படும். தொடர்புகளுக்கு:- கிருஷ்ணாபாம் வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய்.

(87082)

2 மின் மோட்டர் (3 பேஸ் **71/2 H.P.** இந்தியா), 2 ஸ்டாட்டர் சுவிச், 3 மெயின் சுவிச், 1காஸ் குக்கர் (4 அடுப்புடன் அவனும் புதியது) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.தேவநாதன், தபாற்கந்தோர் அருகில், நாவலடி, கோப்பாய் மத்தி.

(87085)

## இலக்கியக் கட்டுரைகள்

'ஒரு காதலின் கதை' தொடர் கதையை ஒரு கொழும்பு வார இதழில் வாசிக்கிறீர்களா? அதை எழுதும் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1. இலக்கியக் கட்டுரைகள், 2. யாழ்ப்பாணமா? கொழும்பா?, 3. நாடகம் எழுதுவது எப்படி?, 4. யாழ்ப்பாணம்.

(87083)

## அதிரடி வெளியீடுகள்

வியாழ, சனீஸ்வர, இராகு, கேது மாற்றப் பலாபலன்கள் - 2001 உங்களுக்கு எப்படி?, புத்தாண்டின் பலன்கள், அழகியல் (தரம் 1-5 வரை) ஆங்கிலத்தில் கட்டுரைகள், பொது அறிவு - **V.A**.சிவராசா வெளியீடு என்று கேட்டு வாங்குங்கள். (87009)

## தவறிவிட்டது

சாவகச்சேரி, டச்சு வீதியைச் சேர்ந்த பொன்னம்பலம் கனகராணி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.595691702V), விசேட அ.அட்டை (இல.091020489), கப்பல் பயண அனுமதிப் பத்திரம் என்பன வீரசிங்கம் மண்டபத்துக்கும் பஸ் நிலையத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மகாநதி புடைவையகத்தில் ஒப்படைத்து உதவவும்.(87011)

---

யாழ்ப்பாணக் கல்லூரி
**பட்டப்படிப்புகள் பிரிவு**
***464, Hospital Rd., Jaffna.***

**G.A.Q., B.A. (Part I)**
**B.A. (Final)**
ஆகியவற்றுக்கான ஆங்கில இலக்கியம், ஆங்கில மொழியியல் உட்பட சகல பாடங்களும்

*ஆரம்பம்:*
**28.04.2001**
**(சனி - 3.00 S.L.T.)**

அத்துடன் **A/L** ற்குரிய ஆங்கில இலக்கியம்

*ஆரம்பம்:*
**28.04.2001 4.00 S.L.T.**

(87026)

---

## சுதுமலையில் ஒரே இரவில் 3 வீடுகளில் திருட்டு

சுதுமலைப் பகுதியில ஒரே நாளில மூன்று வீடுகளில் திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

நள்ளிரவு வேளை இராசலிங்கம் ரவிச்சந்திரன் என்பவரது வீட்டு யன்னல் கம்பிகளை வளைத்து உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பெறுமதிமிக்க உடுபுடைவைகள் அடங்கிய 2 'சூட்கேஸ்'களை எடுத்துச் சென்றனர்.

பின்னர் உடுப்புக்களை எடுத்துக் கொண்டு, 'சூட்கேஸ்'கள் வீசப்பட்டிருந்தன.

அன்றிரவு மேலும் இரண்டு வீடுகளில் ஓடுகளைப் பிரித்துக் கொண்டு உள்ளே இறங்கி பெறுமதி மிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

(க-15)

## விவசாய குழுக் கூட்டம்

கோப்பாய் பிரதேச செயலக விவசாயக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்ட சகல உறுப்பினர்களையும் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (க-178)

---

# 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 26 - 04 - 1953

உதிர்வு 26 - 04 - 1994

## அமரர் சிவபாதம் பாலச்சந்திரன்

ஏழாண்டுகள் சென்றாலும் உன் பிரிவுத்
துயரம் ஆறவில்லையே!
எம் மனதில் குடிகொண்ட **பாலாவே!**
*உன் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்:
எம்.இராமலிங்கம்,
*கப்பல்வளவு,*
*சுன்னாகம்.* (87041)

பிரிவால் துயருறும்
**தாய், சகோதரி, மைத்துனர்** (கனடா),
**மனைவி, மகள்** (புத்தளம்),
**மகள்** (ஜேர்மனி)

---

# 1 st in COM, G.A.Q. யாழ். / பேராதனை

(வெளிவாரி)

இவற்றுக்குரிய பதிவுகள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன. **A/L** கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகியவற்றில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இக்கற்கை நெறிக்குத் தகுதி உடையவர்கள் ஆவர். இதற்கான பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

*புதிய பிரிவு விரிவுரைகள் ஆரம்பம்:* 28.04.2001 (காலை 8 மணி)

## புதிய உயர் கல்லூரி

*ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.*

*நிர்வாகி*
**S.அருள்நங்கை**

(87036)

---

## யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முறைசாராக் கல்விப்பிரிவு

**கணனி, வீட்டு மின் இணைப்புப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்:-**

**2001.05.03 வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி (புதிய நேரம்) பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர் அன்றைய தினம் கல்லூரிக்கு சமுகம் தரவும்.**

**- அதிபர்.**

(87035)

---

# SLAS

**இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள் சேர்த்தலுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய வகுப்புகள்**

ஆரம்பம்:- 28.04.2001 (பி.ப.2.00)

ஆசிரியர் - **அ.குமாரவேல்**

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(86940)

---

# 16ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 14 - 08 - 1936

உதிர்வு 13 - 04 - 2001

## அமரர் கனகசபை குககுமாரராஜா

(இளைப்பாறிய உபஅதிபர், விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**திதி:-27.04.2001**

கடந்த 13.04.2001 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (27.04.2001) வெள்ளிக்கிழமை காலை 9:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய உணவிலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவு செய்து இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக மனமுவந்து ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*51/12, செட்டித் தெரு,*
*நல்லூர்.*

பிரிவால் துயருறும்
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**

(87021)

---

# முதலாவது பிறந்த தின வாழ்த்து

***2001-04-26***

HAPPY



BIRTHDAY

# செல்வன் ஹரீஷ் கண்ணதாசன்

அளவெட்டியைச் சேர்ந்த கண்ணதாசன் - அச்சுவேலியைச் சேர்ந்த தயாபரி தம்பதிகளின் செல்வப்புதல்வன்

## செல்வன் ஹரீஷ்

**தனது முதலாவது பிறந்த நாளைப் பிரான்ஸில் உள்ள தனது இல்லத்தில் இன்று (2001-04-26) வியாழக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.**

**ஹரீஷை அப்பா,அம்மா, அச்சுவேலியில் வசிக்கும் அம்மப்பா, தயாளினி சித்தி, சிவபாலலிங்கம் சித்தப்பா, தங்கை நிவேதிகா மற்றும் சித்திமார், அளவெட்டியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சுவிசில் வசிக்கும் தயா மாமா, யசோ அத்தை, அத்தான் சாயிதன், கனடாவில் வசிக்கும் லோகதாசன் சித்தப்பா குடும்பத்தினர், அத்தை காந்திமதி குடும்பத்தினர், பிரான்ஸில் வசிக்கும் குகதாஸன் சித்தப்பா குடும்பத்தினர், சுகுணதாஸன் சித்தப்பா குடும்பத்தினர், லண்டனில் வசிக்கும் விமலதாஸன் சித்தப்பா குடும்பத்தினர், வன்னியில் வசிக்கும் பூட்டிமார், அப்பப்பா, உற்றார், உறவினர் காட்டுமலைக் கந்தன் அருளால் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.**

*நாவற்காடு,*
*அச்சுவேலி.*

(C/164311)

**- சி.தங்கவேல்**
(அம்மப்பா)

# உடல், உளப் பாதிப்புகளுடனேயே வன்னி மாணவர் இங்கு பயில்கின்றனர்

## கிளிநொச்சி மாணவர் ஒன்றியம் வேதனை

யாழ்ப்பாணம், ஏப். 26
வன்னி மாணவர்கள் பொருளாதார நெருக்கடி மற்றும் கெடுபிடிகள் காரணமாக உடல், உளப் பாதிப்புகளுடனேயே இங்கு தமது கல்வியைச் சிரமங்களுடன் தொடர்கின்றனர்.

— இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம், வன்னி மாணவர்களின் வேதனைகளை விவரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து, யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்துப் பீடங்களிலும் மற்றும் ஆசிரியர் பயிற்சி கலாசாலை, தொழில் நுட்பக்கல்லூரி, உடற்கல்வியியற் துறையிலும் மாணவர்கள் தமது உயர் கல்வியினைத் தொடர்ந்து வருகின்றனர்.

இந்த மாணவர்கள் தம் கல்விப் பயணத்தில் பெரும் பொருளாதார நெருக்கடியுடன், தமது பெற்றோருடனான சீரான தொடர்பின்மை, வதிவிடப் பிரச்சினை, விடுகைக் காலங்களில் கூட தமது வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலையிலும் இவை எல்லாவற்றிற்கும் மேலாக பாதுகப்பு நெருக்கடிகளுக்கும் முகங் கொடுத்து தமது உயர் கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர்.

தமது குடும்பங்களுக்குள் ஏற்படுகின்ற உயிர் இழப்புக்களில் கூட கலந்து கொள்ள முடியாமல் பல மாணவர்கள் அந்த மன அழுத்தத்துடனேயே தமது கல்வியைத் தொடர்கின்றனர். இந்த உண்மைகள் அவர்களுக்குள் உறங்கிப் போகும் ஒன்றாகவே நோக்க வேண்டியதாக உள்ளது.

### சிவபாலனின் திடீர் மறைவு

எமது மாவட்டத்திலிருந்து ஆசிரியர்பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டு கடந்த ஒருவருடமாகத்தமது கற்கைநெறியைத் தொடர்ந்து கொண்டிருந்த எமதுமாவட்ட மாணவன் பாலசிங்கம் சிவபாலனின் திடீர் மறைவு வன்னிப்பகுதி மாணவர் எல்லோரையும் பெரும்அதிர்ச்சியிலும், ஆழ்ந்த கவலையிலும் ஆழ்த்தியுள்ளது.

வெற்றுடலையாவது வன்னிப் பகுதிக்கு அனுப்புவதற்கு மாணவர்கள் எடுத்த பகீரதப் பிரயத்தனம் இன்று நாம் எவ்வாறான இறுக்கமான சூழ்நிலைக்குள் இருக்கிறோம் என உணரும் போது ஆழ்ந்த கவலையாகவும், வேதனையாகவும் உள்ளது.

இது விடயமாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்ட போது அவர்களது இறுக்கமான சட்டவிதிகள் சாதாரண சிவிலியன் மட்டில் இவ்வாறானமனிதாபிமான உதவிகளைச் செய்யக் கூடிய வகையில் இல்லை என்பது தெளிவாகியுள்ளது. இருந்த போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டிய ஆர்வத்திற்கும் எடுத்த நடவடிக்கைகளுக்கும் எமது ஒன்றியத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இனிவரும் காலங்களிலும் சிவிலியன்கள் விடயத்தில் சில ஆக்கபூர்வமான விடயங்களை எடுக்க வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

### வேதனை தரும் விடயம்

இன்று யாழ்ப்பாணத்தில் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் அரசாங்கத் தரப்பால் பிழையான விதத்தில் நோக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய ஒன்றே. எம் மாணவர்கள் தமது உள்ளத்துணர்வுகளை வெளிக் கொணர்வதோடு நாட்டில் அமைதியும், சமாதானமுமான சூழ்நிலை ஏற்படுவதற்காக உண்மையாக உழைக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான ஒரு சமாதான சூழ்நிலையில் தான் தமது கற்கை நெறிகளைச் சீராகத் தொடர முடியும் என்ற மன உந்துதல்களே இவர்களது உள வெளிப்பாடாகும். இவ்வாறாக இவர்கள் முன்னின்று செயற்படும் போது அதை வேறுவிதமாகத் திரிபுபடுத்தி எம் மாணவர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது எமக்கு ஆழ்ந்த கவலையையும், மனவேதனையையும் தருகிறது.

எமது மாணவனின் இம் மறைவும், மறைவுக்குப் பின்னால் அவனது வெற்றுடலையாவது அவனது பெற்றோர்கரம் சேர்வதில் உள்ள இடர்களும் வெளிக்காட்டுவது என்னவெனில் நீண்டுசெல்லும் இனப்போர் விரைவில் விடைபெற்று எமது மண்ணில் அமைதியும், சமாதானமும், சுபீட்சமுமான ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும் என்பதேயாகும்.

அதற்காக நாம் தொடர்ந்து உழைக்கவும், குரல் கொடுக்கவும் ஆயத்தமாகவுள்ளோம்.

இம் மாணவனின் வெற்றுடலை அனுப்புவதில் உதவி செய்த அனைத்துத்தரப்பினரையும் நன்றியோடு நினைவில் கொள்கின்றோம். அத்துடன் இவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (௬)

# சிறிதளவாக மழை பெய்யும் மார்ச் மாதக் காலப் பகுதியிலேயே கூடுதலான மின்னல் தாக்குதல்

கொழும்பு, ஏப். 26
மார்ச் மாதத்தை உள்ளடக்கிய காலப் பகுதியிலேயே கூடுதலான மின்னல் தாக்குதல் சம்பவங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்டிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்திருக்கிறது.

பருவப்பெயர்ச்சிக் காலப்பகுதிகளுக்கு இடையில் வரும் மார்ச் மாத நடுப்பகுதி தொடக்கம் மே மாதம் நடுப்பகுதி வரையிலான நாள்களில் மின்னல் தாக்குதல்கள் கூடுதலாக இடம்பெறுகின்றன,

இந்தப் பகுதியில் சிறிதளவே மழை பெய்கிறது. தாழ்ந்த வளிமண்டலவியல் அமுக்கமும் காணப்படுகிறது. உஷ்ணம் கூடுதலாக இருப்பதால் நீர் முகிலாக மாறுகிறது.

முகில்களுக்குள் நேர், எதிர் மின்சாரத் தாக்கங்கள் ஏற்படுகின்றன. இதனாலேயே மின்னல்கள் ஏற்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறுகின்றது. (க-9)

# காணாமற்போனோர் குறித்த விசாரணை தற்போது துரிதம்

யாழ்ப்பாணம், ஏப். 26
கொழும்பில் இருந்து இங்கு வருகை தந்துள்ள புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளுக்கு அதிகளவிலானோர் சமூகமளித்து வருவதால் விசாரணைகள் துரிதமாகநடைபெறுவதாகப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இரண்டாம் கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இந்த விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் இதற்கென இன்னும் சிலர் அழைக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், சுன்னாகம் மற்றும் பருத்தித்துறைப் பொலீஸ் நிலையங்களில் இந்த விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (க-10)

# எத்தனை தடைகள் வந்தாலும் முயற்சியை நோர்வே கைவிடாது

## தூதரக அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, ஏப். 26
சமாதான முன்னெடுப்பில எத்தனை தடைகள் வந்தாலும் நோர்வே தனது முயற்சியிலிருந்து ஒருபோதும் பின்வாங்காது என்றும், தொடர்ந்து சளைக்காது அதனை முன்னெடுத்துச் செல்லும் என்றும் நோர்வே தூதரக இரண்டாவது செயலாளரும், தகவல் தொடர்பு அதிகாரியுமான தோமஸ் ஸ்ரேன்ஜ் லான்ட் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தையும், புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவோம். இதற்கான செயற்பாடுகளில் முன்னேற்றம் காணுவோம் என்று குறிப்பிட்ட அவர் அடுத்த கட்ட நடவடிக்கை எதனையும் வெளியிட மறுத்துவிட்டார். நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மிக விரைவில் கொழும்புக்கு விஜயம் செய்வதற்கான எத்தகைய திட்டங்களும் இல்லையெனவும் தோமஸ் குறிப்பிட்டார். (௬)

# சமாதானப் பிரியர்களாகக் காட்டவே புலிகள் யுத்தநிறுத்தம் செய்தனர்

## சிரேஷ்ட அமைச்சர்கள் கருத்து

கொழும்பு, ஏப். 26
விடுதலைப்புலிகள் வெளி உலகுக்குத் தம்மைச் சமாதானப் பிரியர்கள் என்று காட்டுவதற்கே யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டனர் என்று சிரேஷ்ட அமைச்சர்கள் கருத்து வெளியிட்டனர்.

கொழும்புச் செய்தி வட்டாரங்களுககுக் கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் இப்படிக் கூறியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் தமது யுத்தநிறுத்தத்தை மூன்று முறை நீடித்தார்கள். ஆனாலும் அந்தக் காலப் பகுதியில் அவர்களின் வழமையான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்தில் இருந்து அரசு நல்ல பாடத்தைக் கற்றுள்ளது.

பேச்சுக்காக யுத்தத்தை நிறுத்தியுள்ளதாக அறிவித்த புலிகள், பேச்சுக்கு நிபந்தனைகளை விதித்துக்கொண்டிருந்தனர்.

நிபந்தனை எதுவும் இன்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த நாம் தயாராகவுள்ளோம் புலிகளும் நிபந்தனை எதுவும் இன்றிப் பேச்சுக்கு வரவேண்டும் — இப்படி அமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-3)


# அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26
வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பத்துக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு அந்தர்மடம் வடக்குகிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (க-86)

# அரியாலையில் சடலமாக மீட்கப்பட்டவர்யார்?

வலி. வடக்கு, ஏப். 26
அரியாலை மத்தியில் உள்ள கிணற்றில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது இந்தச் சடலம் உரிமை கோரப்படாத நிலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நபர் பற்றிய விவரங்கள் தெரிந்தால் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள பொலீஸாருடன் அல்லது அரியாலை மத்தி கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (க-86)



# சாயி சிந்தனை

உங்களுக்குத் தெரிந்து உங்களிடத்தில் இல்லாத தவறுகள் பற்றி மற்றோர் எதுசொன்னாலும் பொருட்படுத்தாதீர்கள்; உங்களிடம் உள்ள தவறுகளை, மற்றோர் உங்களுக்குச் சுட்டிக் காட்டுவதற்கு முன்பே, சரி செய்துவிட முயலுங்கள். உங்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டுபவர்கள் மீது கோபமும், பழி வாங்கும் எண்ணமும் கொள்ளாதீர்கள் — அதற்காகப் பதிலுக்கு அவர்களுடைய தவறுகளை நீங்கள் சுட்டிக் காட்ட வேண்டாம்.

# பொது இடங்களில் களியாட்டமா?

# நெடுந்தீவில் பல இடங்களிலும் விழிப்புணர்வுச் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப் 26
சுற்றுலா மேற்கொண்டு நெடுந்தீவுக்கு வருவோர் அங்கு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்து நெடுந்தீவு சமூக விழிப்புணர்வுக் குழு தீவின் பல்வேறு பகுதிகளிலும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

"எம் தீவைப் பாதுகாப்போம்" என்ற தலைப்பில் ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகளில் சுற்றுலா வருவோர் நெடுந்தீவின் பொது இடங்களில் மதுபாவனையிலும், களியாட்டங்களிலும் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

"கியூடெக்" அமைப்பின் நெடுந்தீவுப் பிரிவினரும் இது குறித்த சுவரொட்டிகளை நெடுந்தீவின் பலபகுதிகளில் ஒட்டியுள்ளனர். (க-7)


# அமரர் கே. பூரணம்பிள்ளை

அவர்களின்

வாழ்க்கைக்கும் சேவைக்கும் நன்றி செலுத்தும்

# இரங்கல் வழிபாடு

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இங்கிலாந்தில் நடைபெறும் அதே வேளை இவ்வழிபாடு இங்கு நடைபெறும்.

காலம்:- 28—04—2001 சனிக்கிழமை
பிற்பகல் 3. 30 மணி (புதிய நேரம்)

இடம்:- பரியோவான் ஆலயம், சுண்டுக்குளி,

உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் இவ்வழிபாட்டில் கலந்து கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்கின்றோம்.

திரு. எஸ். தனபாலன்
அதிபர்,
சென். ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/16430)

## 'சிவில்' உடையில் மக்களுடன் கலந்து முன்னேறி

# இந்தியப் பாதுகாப்பு நிலை மீது பங்களாதேஷ் படைகள் தாக்குதல்!

புதுடில்லி, ஏப். 26

சாதாரண உடையில் மக்களுடன் கலந்து இந்திய எல்லைக்குள் புகுந்த பங்களாதேஷ் படையினர், இந்திய எல்லைக் காவல் படைநிலை ஒன்றைக் கைப்பற்ற முயற்சி மேற்கொண்டனர். இந்திய வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அந்த முயற்சியை முறியடித்தனர்.

அஸாம் மாநிலத்தின் எல்லைப்புற மாவட்டமான கரீம்கஞ்சில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

லதீப்திலா எல்லை வாசல் வழியாக இந்தியா, பங்களாதேஷ் இடையில் வழக்கமான பொது மக்கள் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும்—

அந்தச் சமயத்தில் பங்களாதேஷ் படையினர் ஆயுதங்களை மறைத்து வைத்தபடி பொது மக்களைப் போன்று சாதாரண உடையில் உட்புகுந்ததாகவும்—

இந்திய இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்திய எல்லைக்குள் நுழைந்தபங்களாதேஷ் படையினர் அப்பகுதியில் இருந்த எல்லைப் பாதுகாப்புப் படையினரின் நிலை மீது தாக்குதல் நடத்தியதாகவும்—

ஆனால் தாம் மிகக் கடுமையான எதிர்த்தாக்குதல் நடத்தியதையடுத்து அவர்கள் பின்வாங்கிச் சென்று விட்டதாகவும்—

இந்திய இராணுவம் கூறியுள்ளது—

இந்த மோதல் சம்பவத்தையடுத்து 1286 கிலோ மீட்டர்கள் நீளமான இந்திய, பங்களாதேஷ் எல்லை நெடுகிலும் இந்திய இராணுவத்தினர் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

மேகாலயா மாநில எல்லையில் பங்களாதேஷ் வீரர்கள் சமீபத்தில் மேற்கொண்ட தாக்குதலில் 15 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தால் இருநாடுகளிடையே உருவாகியுள்ள முறுகல் நிலையை தற்போதைய தாக்குதல் முயற்சி மேலும் சிக்கலாக்கும் என்று கருதப்படுகின்றது.

(ஒ-6-9)

## இந்திய இராணுவ வீரர்கள் படுகொலை:

# தகுந்த விசாரணை நடக்கும் என்கிறார் பங்களாதேஷ் பிரதமர்

டாக்கா, ஏப். 26

பங்களாதேஷ் எல்லைப் படை வீரர்களால் இந்திய இராணுவத்தினர் 15 பேர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக தகுந்த விசாரணை நடத்தப்படும் என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸினா பேகம் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

மேற்படி படுகொலை தொடர்பாக பங்களாதேஷ் அரசுக்கு எதுவும் தெரியாது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். படுகொலைக்குக் காரணமானவர்கள் மீது உரியமுறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

— இப்படி பங்களாதேஷ் பிரதமர்ஷேக்ஹஸினா தனது தொலைபேசி உரையாடலின் போது உறுதியளித்தார்.

இதேவேளை—

உலக அரங்கில்

பங்களாதேஷ் பிரதமருடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்ட இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இந்தப்படுகொலை தொடர்பாக இந்திய மக்கள் மனவேதனை அடைந்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

# பாகிஸ்தானிய ராணுவ ஆட்சியின் அவசர சட்டம் சட்டவிரோதம்

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

இஸ்லாமாபாத், ஏப். 26

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளர்கள் அமுல்படுத்தியுள்ள ஊழல் தடுப்புக் குறித்த அவசரச் சட்டத்தின் ஷரத்துகள் சட்டவிரோதமானவை.

இவ்வாறு இராணுவ ஆட்சியின் தேசிய பொறுப்பேற்பு அவசரச் சட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது வழங்கிய தீர்ப்பில் பாகிஸ்தானிய உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்களை 15 நாள்களுக்கு மேல் காவலில் வைக்கக்கூடாதென்றும் —

பொதுத்துறைப் பணியாளர்களை 10 ஆண்டுகளுக்கு மேல் பணி நீக்கம் செய்யக்கூடாதென்றும் — உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் ரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு இந்த அவசரச் சட்டத்தை அமுல்படுத்தியிருந்தார்.

(ஒ-6-9)

# தைவானுக்கு ஆயுதம் விற்க அமெரிக்கா மறுப்பு

வாஷிங்ரன், ஏப், 26

தைவானுக்கு கடற் படையினர் பயன்படுத்தும் நவீன ரக ஆயுதங்களை விற்பதில்லை என அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

முன்னதாக தைவானுக்கு நவீன ரக ஆயுதங்களை அமெரிக்கா விற்பதற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

(ஒ)

# பசுபிக்கைக் கடந்த ஆளில்லா விமானம்

வாஷிங்ரன். ஏப். 26

ஆளில்லாத - 'ரிமோட் கொண்ட்ரோல்' முறையில் இயங்கும் - ஜெட் விமானம் ஒன்று முதன் முதலில் எங்கும் இறங்காமல் பசுபிக் சமுத்திரத்தைக் கடந்து சாதனை படைத்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவிலிருந்து புறப்பட்ட இந்த ஜெட் விமானம், பசுபிக் சமுத்திரத்தைக் கடந்து தெற்கு ஆஸ்திரேலியாவின் அடலைட்சை சென்றடைந்தது. 23 மணித்தியாலங்கள் 20 நிமிடங்கள் பிடித்த இந்தப் பயணத்தின் போது எங்கும் தங்காமல் ஜெட் விமானம் தொடர்ந்து பறந்தது

(ஒ-6-9)

# பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் ஊழல் குற்றச்சாட்டில் கைது!

பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் ஜோசப் எஸ்ரடா ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் நேற்றுக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

மணிலாவிலுள்ள எஸ்ரடாவின் வீட்டுக்குச் சென்ற பொலீஸார் 3 மணித்தியாலங்கள் இடம்பெற்ற வாக்குவாதத்தின் பின்னர் அவரைக் கைதுசெய்தனர்.

எஸ்ரடாவின் வீட்டுக்குள் வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், வெளியில் திரண்டிருந்த நாற்றுக்கணக்கான மக்கள், வீட்டை நோக்கிக் கற்களை வீசித் தாக்கியதாகக்கூறப்படுகிறது.

(ஒ-7)

# உலகக் கோப்பைப் போட்டியில் இந்திய அணி பங்கேற்காது

## கிரிக்கெட் சபைத் தலைவர் அறிவிப்பு

மத்திய அரசிடமிருந்து தெளிவான வழிமுறைகள் குறித்த அறிவுறுத்தல் கிடைக்கும்வரை உலகக் கோப்பை ஆசியகோப்பைப் போட்டிகள் மற்றும் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் 'நொக்அவுட்' போட்டிகள் ஆகியவற்றில் இந்திய கிரிக்கெட் அணி கலந்து கொள்ளாது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய தலைவர் ஏ. சி. முத்தையா நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் இவ்வாறு கூறினார்.

இருநாடுகள் கலந்து கொள்ளும் தொடர் போட்டிகள் மற்றும் 3 நாடுகள் பங்கேற்கும் முத்தரப்புப் போட்டிகள் ஆகியவற்றில் மட்டுமே இந்திய அணி இனிமேல் கலந்து கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் சார்ஜாவில் நடந்த பாகிஸ்தான், இலங்கை அணிகளுடனான முத்தரப்புப் போட்டியில் இந்திய அணி பங்கேற்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் சம்மதித்திருந்த போதும் அரசின் முடிவினால் இந்திய அணி அந்தப் போட்டியில் கலந்துகொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

(ஒ-6-9)

# ஊடக சுதந்திரம் தொடர்பாக மனித உரிமை அமைப்பு கவலை

ஜெனிவா, ஏப். 26

ஊடகசுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அவசரத் தேவைகள்எழுந்தள்ளனஎன்று ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சமீபத்தில் நடந்த ஆணைக்குழுவின் கூட்டத்தில் உரையாற்றிய அதன் உறுப்பினர்கள் ஊடக சுதந்திரம் குறித்து வலியுறுத்தினார்கள்.

ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் —

அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பாக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து —

கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் —

அதற்குச் சாத்தியமான முறைமை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் —

ஊடக சுதந்திரம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

(ஒ-ம-9)

# செயற்கை கோளை நிலைநிறுத்துவதில் சிக்கல்

ஸ்ரீஹரிகோட்டா, ஏப். 26

கடந்த 18 ஆம் திகதி விண்ணுக்குச் செலுத்தப்பட்ட இந்திய செயற்கைக் கோளை சரியான இடத்தில் நிலைநிறுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் இழப்புக் காரணமாக செயற்கைக் கோளை புவி வட்டப்பாதையில் அதற்குரிய இடத்தில் நிலைநிறுத்தும் முயற்சி தடைப்பட்டுள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வு நிலையம் கூறியுள்ளது.

(ஒ)

# வெப்பநிலைக்கேற்ப வர்ணம் மாறும் நவீன பூச்சு சீனாவில் தயாரிப்பு

குளிரூட்டிகள் செயற்படுவதைப் போல வெப்பமான காலநிலையில் குளிர் நிலையை ஏற்படுத்தவும், குளிரான காலநிலையில் இளஞ்சூட்டு நிலையைப் பேணவும் கூடிய வர்ணப் பூச்சு(பெயின்ற்) ஒன்றை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

வீடுகள், அலுவலகங்களின் சுவர்களில் இந்த வர்ணப்பூச்சைப் பிரயோகிப்பதன் மூலம் வெப்பநிலை அதிகரிக்கும் காலங்களில் வெப்பத்தை உறிஞ்சி ஏறத்தாழ 4 பாகை செல்சியஸினால் வெப்ப அளவைக் குறைப்பதுடன், குளிர் காலங்களில் ஏறத்தாழ 8 பாகை செல்சியஸ் அளவு வரை தேவைக்கேற்ப வெப்பத்தின் அளவைக் கூட்டி இதமான காலநிலையை ஏற்படுத்தமுடியும்.

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை இந்த வர்ணத்தை மீண்டும் சுவர்களில் பூச வேண்டும்.

கோடை, குளிர் என்று மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப நிறத்தை மாற்றிக் கொள்ளும் வகையில் இந்த வர்ணப்பூச்சு தயாரிக்கப்பட்டுள்ளது.

வர்ணப்பூச்சு காலநிலைக்கேற்ப நிறத்தை மாற்றிக்கொள்வதற்காகவும், இரசாயனவியல் ரீதியில் பன்பகுதிய சேர்வைக்குரியதாக இருக்கும் இந்த நிறப்பூச்சிலுள்ள நிறப்பொருள்கள் ஏனைய இரசாயனங்களுடன் தாக்கமுற்று கெடுவதைத் தவிர்க்கும் வகையிலும் ''பளிங்கு ஊதா லக்டோன்'' என்ற மூலப்பொருள்களைப் பயன்படுத்தியுள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

குளிரூட்டிகளின் செயற்பாட்டை ஒத்த ஆனால் எரிபொருள் செலவற்ற முறையில் பயன்படுத்தக்கூடிய திறன் மிகுந்த குளிரூட்டிப் பொருளைத் தயாரிக்க வேண்டும் என்பதே தனது இலக்கு என்கிறார் இந்த வர்ணப் பூச்சைக்கண்டு பிடித்து தொடர்ந்தும் அதனை ஆராய்ந்து வரும் சீனாவின் டொங்கி பல்கலைக்கழக விஞ்ஞானியான ஜிப்பின்மா.

(க-7)


# மரண அறிவித்தல்

## திருமதி துரையப்பா நல்லம்மா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா நல்லம்மா நேற்று (25-04-2001) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி பொ. செ. துரையப்பா (இளைப்பாறிய ஆயுர்வேத மருத்துவர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பிராசா (ஏழாலை) அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பொ. செல்லையா (கந்தர்மடம்—வைத்தியர்) அவர்களின் மருமகளும், வைத்திய கலாநிதி செ. து. சண்முகராசா (ஆயுள்வேத வைத்திய அதிகாரி, வேலணை பிரதேச சபை), தேவராசா (Physician Central Meddlesex Hospital, U K.), ரஞ்சனா தேவி (பிரான்ஸ்), சற்குணராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுசிராகமணி, பரமேஸ்வரி, மகேந்திரராஜா, கலா ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜனன், கஜவதனி, கஜவதனன், கஜரூபன், கஜந்தி, தர்சன், பிரசன்னா, மயூரன், கார்த்திக ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26-04-2001) வியாழக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. து. சண்முகராசா
(மகன்)
50/20, செட்டித் தெரு,
நல்லூர்.
(கி/16442)

# யுத்தத்தை அரசு உடனடியாக நிறுத்தி புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

## 80 அரச சார்பற்ற அமைப்புகள் ஜனாதிபதிக்கு கடிதம்

உடனடியாக யுத்தத்தை நிறுத்தி அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். எனவே இதனை எவ்விதத் தாமதமுமின்றி யுத்த நிறுத்தம் மேற்கொள்ள வேண்டுமென 80 அரச சார்பற்ற அமைப்புக்களின் கூட்டு அமைப்பான மக்கள் சமாதான முன்னணி ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அண்மையில் யாழ்.சென்ற தேசிய சமாதானப் பேரவையின் பிரதிநிதிகளுடன் மக்கள் சமாதான முன்னணியின் பிரமுகர்களும் சென்று திரும்பியுள்ளனர். யாழ்.மக்களின் கருத்துக்களை தாம் கேட்டறிந்ததாகவும் அவர்களின் நிலையை நன்கு அறிந்து வந்ததாகவும் கூறும் அவர்கள் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

விடுதலைப் புலிகள் தமது நல்லெண்ண வெளிப்பாடாக பல தடவைகள் யுத்த நிறுத்தத்தை நீடித்தனர். ஆனால் தங்களுடைய அரசாங்கம் அதற்கு எவ்வித நல்ல சமிக்ஞையையும் காட்டவில்லை என்பதே எமது கருத்தாகும்.

யுத்தத்தினால் முழுத் தமிழ் மக்களும் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை யாழ்.சென்ற எமது பிரதிநிதிகள் காணக்கூடியதாக இருந்தது.

பேச்சுவார்த்தைக்கான ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையை ஏற்படுத்தும் படி புலிகள் அரசுக்கு விடுக்கும் கோரிக்கைகளை தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடைகளையும் அரசாங்கம் நீக்க வேண்டும் என்று யாழ்மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மக்களின் குரலுக்கு செவிசாய்த்து தங்களது அரசு செயற்பட வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம். கடிதத்தின் பிரதிகள் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (க)

### யாழ்.மாநகரசபை சுகாதாரப் பகுதி விவகாரம்:

# குடும்பநல உதவியாளர்கள் கடமைக்குத் திரும்ப அவகாசம்

யாழ்ப்பாணம்,ஏப்26

யாழ்.மாநகரசபை சுகாதாரப் பிரிவில் கடமையாற்றி தற்போது கடமைக்குச் சமுகமளிக்காதிருக்கும் குடும்பநல உதவியாளர்கள் எதிர்வரும் மே முதலாம் திகதிக்கு முன்னர் கடமைக்குத் திரும்பினால் அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

குடும்பநல உதவியாளர்கள் மீண்டும் கடமைக்குத் திரும்பும் பட்சத்தில் அவர்கள் இது வரை பெற்றுக்கொள்ளாத பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இவர்கள் இனியும் தங்கள் கடமைகளுக்குத் திரும்பாது விட்டால் இவர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களைக் கோருவதுடன் - அவர்களிடம் உள்ள மாநகர சபைக்குரிய சீருடைகள், சைக்கிள்கள், மருத்துவ உபகரணங்களை திருப்பிப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-5)


சாவகச்சேரி - கல்வயல் - பெருங்குளம்

ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் திருக்கோயில்

ஆனைமுகன் அடியார்களே!

பகவத் கிருபையால் அனுதினமும் முப்பொழுதும் துதி செய்யும் அடியவர்களுக்கு அருள் புரியும் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகப் பெருமானின் தெய்வீக மஹோற்சவ நாள்கள் இவ்வருஷம் சித்திரை மாதம் 15ஆம் நாள் 28-04-2001 சனிக்கிழமை முதல் 07-05-2001 திங்கட்கிழமை வரை ஆகும். இந்நாள்களில் மனதால் விநாயகப் பெருமானை நினைத்து விரதமிருந்து மிக விரைவில் பூஜை வழிபாடு நிகழ, தென்மராட்சி மக்கள் தங்கள் இடம் சேர, விநாயகர் பதம் பணிந்து உபயகாரர், விரதகாரர், வழிபடுவோர் அனைவருக்கும் இந்நாள்களை நினைவு கூர்ந்து இறையாசியும் தென்மராட்சி மக்கள் தமது சொந்த இடங்களுக்கு விரைவில் மீளக் குடியமர்ந்து உன்னருகில் இருந்து உன்நாமம் சொல்ல நாமும் பிரார்த்திக்கின்றோம

மஹோற்சவ விசேட நாள்

சித்திரை 15 – 28.04.2001 சனிக்கிழமை கொடியேற்றம்

சித்திரை 23 – 06.05.2001 ஞாயிற்றுக்கிழமை தேர்

சித்திரை 24 – 07.05.2001 திங்கள் சித்திரா பூரணை தீர்த்த நாள

பிரதம குரு
சிவப்பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக்குருக்கள

ஆலய குரு
சிவஸ்ரீ இ.தேவபாலசர்மா

அடியார்கள் சார்பில்
இறைபணியில்
பரிபாலனசபை.

விளம்பர அன்பளிப்பு

சாரங்கன் நகைமாடம்
இல. 45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சாரங்கா நகைமாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவா நகை மாடம்
சாவகச்சேரி.

(C/16445)


## திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியற்றுறை மண்டபத்தில் 'த கில்லிங் பீல்ட்' என்ற கம்போடியாவில் இடம்பெற்ற உள்நாட்டுப் படுகொலைகளை தத்ரூபமாகச் சித்தரிக்கும் படம் காட்டப்படவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாலசிங்கத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேட்டியை, லண்டனில் உள்ள அன்ரன் பாலசிங்கத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பெற்றதற்காக, இணை ஆசிரியர் ந.வித்தியாதரன் மீது வழக்குத் தொடருமாறு பொலீஸ் திணைக்களம் சட்டமா அதிபரைக் கோரியிருந்தது.

இது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு போதிய ஆதாரம் இல்லை என்றும், அன்ரன் பாலசிங்கத்தின் தொலைபேசி இலக்கம் பலருக்கும் தெரியும் ஆகையால், எவரும் தொடர்பு கொள்ளக்கூடிய நிலை உண்டென்றும் தெரிவித்து, வழக்குத் தொடர முடியாது என்று சட்டமா அதிபர், யாழ்ப்பாணம் பொலீஸ் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தி உள்ளார்.

உதயனில் ஜனவரி 19ஆம் திகதி வெளியான செய்தியை - அன்ரன் பாலசிங்கத்தின் பேட்டியை - அடுத்து யாழ்.பொலீஸ் நிலைய பிரதம இன்ஸ்பெக்டர் அடுத்த நாள் இருபதாம் திகதி உதயன் அலுவலகத்துக்கு வந்து இணை ஆசிரியரை விசாரணை செய்தது தெரிந்ததே. வட பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில் இந்த விசாரணை நடத்தப்பட்டிருந்தது. (அ)

## இன்று பாடநூல் விநியோகம்

தென்மராட்சி,ஏப்.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான இலவசப் பாடநூல்கள் நாளையும் மறுதினமும் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளன.

நாளை பிற்பகல் 1.00 மணிக்குப் பின்னர் பாடநூல்கள் வழங்கப்படுமெனவும், மாணவர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை, தேவையான பாடநூல்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களுடன் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## உறவினரைப் பிரிந்த சிறுவன்

தென்மராட்சி,ஏப்.26

சிறுப்பிட்டியைச் சேர்ந்த ஐந்து வயதான இராசையா பிரசாந்த் என்னும் சிறுவன் உறவினரால் தவறவிடப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் தங்கியிருப்பதாகவும் -

அவரது பெற்றோர் அல்லது உறவினரை உடன் தொடர்பு கொண்டு சிறுவனைப் பொறுப்பேற்குமாறும் -

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் அறிவித்துள்ளார். தனது சகோதரியுடன் நேற்று வடமராட்சிக்குச் சென்ற வேளை இச்சிறுவன் தவறவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## பொருள் ஏற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு கோரியும் லொறி உரிமையாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். பருத்தித்துறையில் தரித்துநின்று பணியில் ஈடுபடும் சகல லொறிகளும் நேற்று முன்தினம் அங்கிருந்து அகன்றன.

இந்தப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு ஒன்று ஏற்படும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்திக்கு நூற்றுக்கணக்கான லொறிச் சாவிகளுடன் அங்கு வந்த படையினர் அவற்றை பயன்படுத்தி அங்கு தரித்து நின்ற லொறிகளில் பத்து லொறிகளைத் தம்முடன் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் தமக்கு 10 லொறிகளைத் தருமாறு படையினர் கேட்டதாகவும் அதற்கு ஒத்துக் கொண்டு லொறிகளை வழங்கத் தயாரான நிலையில் அவற்றை தாம் வைத்திருந்தபோதும் அவர்கள் தம்பாட்டில் வேறு பத்து லொறிகளை எடுத்துச்சென்றுள்ளனர் என்று தனியார் பாரவூர்தி கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதனாலேயே ஏனைய லொறிச் சொந்தக்காரர்கள் அனைவரும் பாதுகாப்புக் கருதி தமது லொறிகளை வீடுகளுக்கு எடுத்துச்சென்றனர் என்றும் இதனால் எமது சேவைகளை மேற்கொள்ள முடியவில்லை என்றும் அவர் மேலும் சொன்னார்.

கடந்த காலங்களில் இவ்வாறு படையினரால் லொறிகள் எடுத்துச் செல்லப்பட்டு 15 தினங்கள் அல்லது ஒரு மாத காலப்பகுதியின் பின்பு சேதமடைந்த நிலையில் மீள ஒப்படைக்கப்படுவது வழமை. ஆனால் கடந்த 9மாத காலமாக இவ்வாறு லொறிகள் எதுவும் அவர்களால் எடுத்துச் செல்லப்படவில்லை.

மேற்படி சந்தர்ப்பங்களின் போது லொறியைப் பயன்படுத்துவற்காக எவ்வித கொடுப்பனவுகளோ அல்லது சேதங்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவோ லொறி உரிமையாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. கொடுப்பனவுகளை வழங்குவதாகக் கூறி பல தடவைகள் 'வவுச்சரில்' ஒப்பங்கள் பெறப்பட்டபோதும் இது வரை அதற்கான கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை.

இதுபற்றி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் முறையிட்டுள்ளதாகவும் அந்தப் பிரதிநிதி மேலும் கூறினார். (ம-க-10-6-117)


கண்ணீர் அஞ்சலி

திருமதி பொன்னம்மா இரத்தினலிங்கம்

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி அன்னறாணி சண்முகலிங்கம்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி பொன்னம்மா இரத்தினலிங்கம்

அவர்கள் 20.04.2001 இல் காலமானதையிட்டு அவரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

C/16444)

வேலையாள்கள் தேவை

தேநீர் தயாரிப்பு மற்றும் இனிப்பு வகைகள் தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்தவர்களும் உணவு சமைத்தலில் திறமை வாய்ந்தவர்களும் தேவைப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

சாலினி உணவகம்

இல.5, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

(87105)

31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி பழனித்துரை ராணி

பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பழனித்துரை ராணி 27.03.2001இல் இந்தியாவில் காலமாகி விட்டார். அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகள்:- சாந்தி
பேரப்பிள்ளைகள்:- கண்ணன், கஜனி
பெறாமகன்:- சுரேஷ்

சுரேஷ் வீடியோ சென்ரர்,
மூத்திரைச்சந்தி.

(87044)

நாவற்குழி வணிகர் கழகம்

அவசர ஒன்றுகூடல்

சகல வர்த்தகர்களையும் எதிர்வரும் (28.04.2001) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இணுவிலில் இயங்கும் தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கக் காரியாலயத்துக்கு அவசர ஒன்று கூடலுக்கு சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு: நாவற்குழி சந்தியிலிருந்து தனங்களப்பு வரையிலான சகல வணிக மன்ற உறுப்பினர்களும் அடங்கலாக.

இ.நடேசன்
செயலாளர்

(87103)

புதிய பிரிவு ஆரம்பம்

DIPLOMA IN COMPUTER PROGRAMMING

வடமராட்சி நெல்லியடி DCS கிளையில் DIPLOMA IN COMPUTER PROGRAMMING

புதிய பிரிவு வகுப்பு ஆரம்பம்: 05.05.2001

MODULES:

- INTRODUCTION OF PROGRAMMING PRINCIPLE.
- FUNDAMENTAL VISUAL BASIC
- MONITARING VISUAL BASIC
- PASCAL PROGRAMMING

DURATION: 3 MONTHS

மேலதிக நேர, செயல் விளக்கங்களுடன் கற்பிக்கப்படும்.

இப்பிரிவில் கற்க விரும்புபவர்கள் 05.05.2001ஆம் திகதிக்கு முன் DCS நெல்லியடியில் தங்கள் வரவினை உறுதிப்படுத்தும் படி கேட்டுக்கொள்கின்றேன்.

மேலதிக விவரங்களுக்கு: DCS நெல்லியடி A.D.யுடன் தொடர்புகொள்ளவும்.

- நிர்வாகி.

DCS
COLLEGE OF COMPUTER TECHNOLOGY

(87106)

# வன்னியில் ஆயர் குழுவினர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு!

வவுனியா,ஏப்.26

வன்னியில் விடுதலைப்புலிகளின் பிரதேசத்துக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் அங்கு போய்ச்சேர்ந்த கத்தோலிக்க ஆயர் குழு நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை சந்தித்துப் பேச்சு நடத்தியது.

நேற்றுக் காலை 6.00 மணிக்கு மடுத்தேவாலயத்தில் இருந்து புறப்பட்ட ஆயர் குழுவினர் காலை 10.00 மணியவில் மல்லாவியைச் சென்றடைந்தனர். அங்கு அவர்களை வரவேற்ற சு.ப.தமிழ்ச்செல்வன் சுமார் 2 மணி நேரம் அவர்களுடன் பேச்சு நடத்தினார்.

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்தும், ஒரு தலைப் பட்சமாகத் தாம் அறிவித்திருந்த போர் நிறுத்தத்தை வாபஸ் பெறவேண்டி ஏற்பட்ட சூழ்நிலை குறித்தும் அவர் ஆயர்களுக்கு விளக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்று மடுத்தேவாலயத்தில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுத்த பினனர் ஆயர் குழுவினர் வவுனியா திரும்புவர் என்று கூறப்பட்டது.

(ம-164)

## தொழில்நுட்ப கற்கைநெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

கொழும்பு உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 2001-2002 கல்வி ஆண்டுக்கு உயர் தேசிய கற்கை நெறியான எச்.என்.டி.ஈ கற்கைநெறிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப இறுதித் தினம் எதிர்வரும் 30ஆம் திகதியாகும்.

விண்ணப்பங்களை அனுப்புவது தொடர்பான விவரங்களையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தையும் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் பார்வையிடலாம். (ஐ)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லன்ஸ்கள் நேற்று பகல் முழுவதும் தீவிர சேவையில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

போதிய அம்புலன்ஸ் வண்டிகள் இல்லாததால் காயமடைந்த படையினர் வேறு வாகனங்கள் மூலமும் ஏற்றி இறக்கப்பட்டதாக கொழும்புச் செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

இதேவேளை -

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் படையினரின் பாவனைக்காக 200 படுக்கைகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக பி.பி.ஸி யின் சிங்கள சேவை தெரிவித்தது.

(ஐ-ம-7)

நவாலியூர் சச்சிக்கு எமது

அஞ்சலிகள்

ஈழத்தின் புகழ்பூத்த இசை, நடன, நாட்டிய விமர்சகரும்,
தலை சிறந்த எழுத்தாளரும்
எமது குடும்ப இனிய நண்பருமான
நவாலியூர் சச்சிதானந்தன்
அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்சலிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

நாதஸ்வர வித்துவான்
N.R.கோவிந்தசாமி குடும்பத்தினர்,
இணுவில். K.இரத்தினகுமார், K.வாகீஸ்வரன்.

(C/16447)

சுடர் ஒளி

29.04.2001 இதழ்

◈ கதிர்காமரின் காய் நகர்த்தல்கள்
நோர்வேக்கு 'நோ'
பேச்சு 'நோ கோ'
அடுத்த 'சீன்' இது தான்!
- காண்டீபம் அரசியல் விமர்சனம்

◈ வெள்ளி விழாவோடு புலிகள் வழி மாறுமா?

◈ கடற்படைக்கு கடற்புலிகளின் தாக்குதல் சவால்கள்
- கள நிலைமை எப்படி?

◈ பாலஸ்தீனர்களும் வடக்குக் கிழக்குத் தமிழர்களும்
- ஆசிரியத் தலையங்கம்.

◈ எஸ்.டி.எஸ் பற்றிச் 'சுடர் ஒளி' மௌனம் ஏன்?... ஏன்?... ஏன்?

◈ சாம்பார் அரசாங்கம
- அரசியல் அம்பலம்

◈ கல்வி, கணனி, தொழில்நுட்ப கற்கை நெறிச் சிறப்பிதழ்.

(C/16446)

சனில் ஆட்ஸ்

13.04.2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 30.04.2001 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

சனில் ஆட்ஸ்

277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Note:-
❊ CD கவருக்கான Print உடன் CD யில் இருந்து CDக்கு பாடல் பதிவு செய்திட 300/= மட்டுமே!
❊ எம்மிடம் M.P.3 தமிழ், ஆங்கிலம், ஹிந்தி படப்பாடல் CDகள் விற்பனைக்குண்டு.
❊ Computer க்கான உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு.

(C/16432)

# மட்டக்களப்பில் தீவிர தேடுதல்

மட்டக்களப்பு,ஏப்.26

மட்டக்களப்பு நகரை அண்டிய பூமபுகார், வெட்டுக்காடு, ஊரணி ஆகிய பகுதிகள் நேற்று அதிகாலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டது.

வீடுவீடாகச் சென்ற படையினர் பொதுமக்கள் அனைவரையும், திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள பொது விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் சென்று தனித்தனியே விசாரணைககுட்படுத்தினர். இளைஞர், யுவதிகள் முகமூடி அணிந்தவர்கள் முன்பு நிறுத்தப்பட்டனர்.

இந்தத் தேடுதலின் போது எவரும் கைது செய்யப்படவில்லை என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிததன. (ம-7-21)

## எழுதுமட்டுவாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யடைந்ததாகவும்-

எழுதுமட்டுவாழிலும், முகமாலையிலும் உள்ள தங்கள் நிலைகளிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் முன்னேறிய படையினர் அப்பகுதியில் எட்டு சதுர கிலோமீற்றர் பிரதேசத்தைப் புதிதாகக் கைப்பற்றியுள்ளதாகவும் -

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்தார்.

நேற்றைய படை நடவடிக்கையின்போது தரைப் படையினருக்கு உதவியாக விமானப் படையினரும் தாக்குதல்களில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நேற்றைய சண்டையின்போது புலிகளிடமிருந்து கடுமையான எதிர்த் தாக்குதல்களை துருப்புக்கள் சந்திக்கவேண்டியிருந்ததாக இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளார்.

புலிகள் சிறியரக ஆயுதங்களைப் பயன்படுத்திய போதிலும் அவர்களின் எதிர்த்தாக்குதல்கள் மிகத் தீவிரமாக இருந்ததாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டிருக்கிறார்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பளைப் பகுதியைக் கைப்பற்றுவதே படைகளின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

ஸ்ரீலங்கா இராணுவத்தின் மூன்று பிரிகேட் படையணிகள் மும்முனைகளில் மேற்கொண்ட இந்த முன்னேற்ற முயற்சியைத் தாங்கள் முறியடித்து விட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

(ஐ-ம-7-6-15)

## நேற்று முதல்நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தப்புவதற்கோ, விநியோகங்களைப் பெற்றுக்கொள்வதற்கோ இடமளிக்காத வகையில் வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் கடற்படை கடல் முற்றுகையை மேற்கொண்டிருந்தது.

படையினரின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு ஆரம்பத்தில் புலிகள் பெரும்பாலும் இயந்திரத் துப்பாக்கியைப் பயன்படுத்தினர். எனினும் பின்னர் பீரங்கி, ஷெல் தாக்குதல்களை மட்டுமே அவர்களால் நடத்த முடிந்தது.

புலிகள் தரப்பில் 75 க்கும் அதிகமானோர் உயிரிழந்தமையும், முந்நூறுக்கும் அதிகமானோர் காயமடைந்ததையும் புலிகளின் தொலைத் தொடர்புகள் உறுதிப்படுத்தின. ஆனால் இதிலும் அதிக எண்ணிக்கையான புலிகள் உயிரிழந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்று தரைத துருப்புகள் தெரிவித்துள்ளன.

தாம் புதிதாகக் கைப்பற்றியுள்ள எட்டு சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

- இப்படி பிரிகேடியர் கருணாரட்ண மேலும் தெரிவித்தார்.

**புலிகள் தரப்புத் தகவல்**

படையினரின் நேற்றைய முன்னேற்ற நடவடிக்கையை தாங்கள் வெற்றிகரமாக முறியடித்துவிட்டதாக நேற்று இரவு புலிகள் அறிவித்தனர்.

தமது பதில் தாக்குதலில் நூறுக்கும் அதிக படையினர் உயிரிழந்ததாகவும் -

முந்நூறுக்கும் அதிகமான படையினர் காயமடைந்ததாகவும் -

புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

எனினும் தமது தரப்பில் உயிரிழந்த, காயமடைந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை புலிகள் நேற்றிரவு வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இதற்கிடையில் -

நேற்றைய சண்டையின் போது புலிகள் தரப்பில் 75 வரையான போராளிகள் உயிரிழந்ததாகவும் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் பி.பி.ஸியின் இணையத் தளத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

(உ-ம-7)

## அ.தி.மு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி தேர்தலில் போட்டியிடாமலேயே ஒருவர் முதலமைச்சர் ஆகலாம் என்றும் -அவ்வாறான நிலையில் அவரது பதவிக்காலம் ஆறு மாத காலமாக இருக்கும் என்றும் -அந்த ஆறு மாத காலத்துக்குள் ஏதாவதொரு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றால் அவர் முதல்வர் பதவியில் நீடிக்கலாம் என்றும்- இந்தியச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதாக சட்டவல்லுநர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம)

SLCDL @ IBMS
SriLanka Computer
Driving Licence
விண்ணப்பித்து விட்டீர்களா?
இப்பரீட்சையாழ் நகரில் நடைபெறும்.
விண்ணப்ப முடிவு திகதி 30.04.2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
IBMS Director (Ad)
No.701 K.K.S Road Jaffna T.P:3165

கணக்கீடு
முகுந்தன்
B.B.A(HONS) F.M.SPL.
A/L 2002
உற்பத்திக் கணக்கு
ஆரம்பம்:
யாழ்.பொருளியற் கல்லூரி
28-04-2001 - 10 மணி
இணுவில் பொருளியற் கல்லூரி
28-04-2001 - 7.30 மணி
BARATHY - சித்தன்கேணி
26-04-2001 வியாழன் - 4.30
(87006)

BARATHY
சித்தன்கேணி
A/L 2003
பொருளியல் - சண்
கணக்கீடு - முகுந்தன்
வணிகக்கல்வி - பசில்
அளவையியல் - R.P.சர்மா
தமிழ், இந்து நாகரிகம் - பாலா
இந்துசமயம் - தரன்
புவியியல் - குமரன்
ஆங்கிலம் - விஜயபாஸ்கர்
நாடக அரங்கியல் - சுதன்
கிறிஸ்தவம் - வசந்தன்
புதிய பிரிவு ஆரம்பம்:
இன்று 26.04.2001
வியாழன் - 4.30 மணி
கலை, வர்த்தகத்துறைக்கு கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஒரு தனித்துவத்தைப் பெற்று வருகின்ற ஒரே ஒரு நிறுவனம் சித்தன்கேணியில் இது மட்டுமே!
(87005)

விற்பனையாகின்றது
A/L மாணவர்களுக்கான தமிழ்ப் பாட வினாவிடைகள்
ஆசிரியர்:- M.S.அமரசிவம் - B.A
கிடைக்குமிடங்கள்:
❊ யாழ்ப்பாணம் - பூபாலசிங்கம் புத்தகசாலை
❊ நெல்லியடி - சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
(C/16443)

TRRO COMPUTER TRAINING CENTER
உங்கள் மன நிறைவான சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 05.05.2001
❊ Diploma Course : MS Office
❊ Certificate Courses
❑ Ms Word 2000
❑ Ms Excel 2000
❑ Ms Access 2000
❑ Ms Power Point 2000
❑ Corel Draw
❑ Page Maker

❊ Internet E-Mail Classes
❊ Children Programme
(சிறுவர்களுக்கான கணனிப்பயிற்சி)
❊ தனிப்பட்ட வகுப்புகள் உங்களுக்கு வசதியான நேரத்தில் ஒழுங்கு செய்யலாம்.
❊ Computer Games - கழகத்தில் அங்கத்தவர்களாக சேருங்கள்.
தொகையான CD எம்மிடம் உண்டு.

❊ உங்கள் தேவைகளுக்கு :
CD Writing
Computer Printing
Roneo Printing ஆகியவற்றிற்கு
எம்மை நாடுங்கள்

விவரங்களுக்கு:
TRRO Computer Training Center
4th Cross Street, Jaffna.
TRRO Computer Training Center
K.K.S. Rd.
Maruthanarmadam Junction
Opp. Ramanathan College.
(C/16434)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.